நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 25 திங்கட்கிழமை (09.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:103

# வன்னி மக்களை மீட்பது குறித்து இந்தியாவுடன் பேசும் அமெரிக்கா

## வாஷிங்ரனில் இன்று சிவ்சங்கர் மேனனுடன் சந்திப்பு

வாஷிங்ரன், மார்ச் 09

**வன்னியில் சிக்கியுள்ள பொதுமக்களை அமெரிக்காவின் இராணுவத்தைப் பயன்படுத்தி மீட்கும் திட்டம் குறித்து, இப்போது வாஷிங்ரன் வந்துள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனுடன் மூத்த அதிகாரிகள் இன்று முக்கிய பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளனர்.**

**இதேவேளை, அமெரிக்காவின் இந்தத் திட்டம் குறித்து இந்திய அரசு முரண்பாடான நிலையைக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

வாஷிங்ரனில் நடைபெறவுள்ள இன்றைய சந்திப்பின் போது வன்னியில் மோதலில் சிக்கியுள்ள 2 லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்களை வெளியேற்றும் அமெரிக்காவின் திட்டத்திற்கான இந்தியாவின் ஆதரவு கோரப்படும் எனச் சொல்லப்படுகிறது.

அமெரிக்க கடற்படை மற்றும் விமானப் படையினரின் உதவியுடன் பசுபிக்கின் அமெரிக்க கட்டளை பீடத்தைச் சேர்ந்த 'மரைன்' துரித படையணியொன்றைப் பயன்படுத்தி வன்னியிலுள்ள பொதுமக்களை மீட்பதற்கான திட்டத்தை வாஷிங்ரன் தீட்டியுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தேடுதல் 12 இளைஞர்கள் கைது

கொழும்பு, மார்ச்9

வவுனியாவிலுள்ள செட்டிக்குளம் மற்றும் பூவரசங்குளம் பகுதிகளில் நேற்றுக் காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையொன்றின்போது 12 இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது வவுனியா நகரப்பகுதியும் சுற்றிவளைக்கப்பட்டது என்றும், கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மீட்புப்பணி குறித்த அமெ. திட்டத்துக்கு ஆதரவளிப்பதற்கு அரசு தயக்கமாம்

கொழும்பு, மார்ச்9

இந்தியாவின் நிலைப்பாட்டைக் கருத்தில் கொள்ளாமல், வன்னி மக்களை வெளியேற்றும் அமெரிக்காவின் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு இலங்கை அரசு தயங்குகிறது என கொழும்பு வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக வன்னி மக்களை வெளியேற்றும் மேற்குலகின் திட்டம் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அருகிவருகின்றன எனவும் கூறப்படுகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து நேற்று வன்னிக்கு உணவுக் கப்பல்

### பொருள்களை இறக்குவதற்கு காலதாமதமாகலாம் என்கின்றது ஐ.சி.ஆர்.சி.

கொழும்பு, மார்ச்9

வன்னிப்பகுதிக்கு கப்பல் மூலமாக நேற்று உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் கொடியுடன் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பலுக்கு கடற்படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளார்கள்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து 400 நோயாளர்கள் சனியன்று மன்னார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 9

வன்னிப் பிரதேசத்தில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் அழைத்து வரப்பட்ட காயமடைந்தவர்களில் 400பேர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார்.

திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தோரே நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இதனால் மன்னார் வைத்தியசாலையில் இருந்த பற்றாக்குறைகளை நீக்கும் பொருட்டு 15 வைத்தியர்களை நியமித்துள்ளதுடன் 10 தாதியர்களையும் அனுப்பவுள்ளதாகவும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் தொடர்கிறது சமர் இரு தரப்பிலும் பெரும் இழப்பு

கொழும்பு, மார்ச் 9

முல்லைத்தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் தொடர்ந்து கடுஞ் சமர் இடம் பெற்று வருகின்றது என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இரு தரப்புகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன என தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்று வரை விடுதலைப் புலிகளில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த விடுதலைப் புலிகளின் 50 சடலங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன என்று இராணு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,மார்ச் 9

காங்கேசன்துறைக்கும்,திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று சேவையில் ஈடுப டும் என்று யாழ். நகர சிவில் நிர்வாக ப்பிரிவு வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. கடந்த சில நாள்களாக இச் சேவை நடைபெறவில்லை.

பிரயாணத்தை மேற்கொள்ள மாவட்ட செயலகத்தில் அனுமதிச் சீட்டினைப் பெற்றவர்கள் தமது அனுமதிச்சீட்டில் குறிப்பிட்ட திகதிக்கு மறு நாள் பயணத்தினை மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்படுகின்றது. (அ-6)

## ஈழத்தமிழர்களைக் காப்பாற்றக் கோரி கர்நாடகாவில் அமைதிப் போராட்டம்




பெங்களூர், மார்ச் 9

இலங்கையில் போரை நிறுத்த வகை செய்து அங்கு தமிழர்களை காப்பாற்றக் கோரி கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் ரஜனி சேவா சமித்தியின் சார்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பெங்களூரில் மகாத்மா காந்தி சாலையில் உள்ள மகாத்மா காந்தி சிலை அருகே ஈழத் தமிழருக்கு ஆதரவாக அமைதிப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் பேராசிரியர் இராமமூர்த்தி, தமிழ் சங்கத்தலைவர் மீனாட்சி சுந்தரம், துணைச் செயலாளர் அன்புநிதி, முன்னாள் தலைவர் இராசுமாறன், கர்நாடக மாநில ரஜனி சேவா சங்கத்தலைவர் ஜி.முருகன்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து புதுமாத்தளனில் நேற்றுப் பேரணி

கொழும்பு,மார்ச்9

வன்னிப் பிரதேசத்தில் நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து நேற்று புதுமாத்தளனில் பேரணியொன்று நடத்தப்பட்டதாக இணையத்தளங்கள் தெரிவித்தன.

புதுமாத்தளனிலிருந்து நோயாளர்களை ஏற்றிச் செல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் அங்கு சென்ற அதிகாரிகள் கரைக்குச் சென்ற வேளை அந்தப் பேரணி நடத்தப்பட்டது. பேரணியில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகரசபை தேர்தலுக்கான திகதி இவ்வாரத்தில் அறிவிக்கப்படும் சாத்தியம்

கொழும்பு,மார்ச்9

யாழ்.மாநகர சபைத் தேர்தல்கள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆணையாளருடன் இவ்வாரம் பேச்சுக்களை மேற்கொள்வார் என்றும் தேர்தலுக்கான திகதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தகவல் வெளியாகியுள்ளது.

யாழ். மாநகரசபைக்கு விரைவில் தேர்தலை நடத்து[illegible] தேர்தல் ஆணையா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அணியினர் தமது ஆயுதங்களை இப்போதைக்குக் களையமாட்டார்கள் எனத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தமது உறுப்பினர்களிடமிருந்து ஆயுதங்களை இப்போதைக்குக் களைய மாட்டார்.

இவ்வேளை கருணாவின் பேச்சாளர் தட்சணாமூர்த்தி கமலநாதன் தெரிவித்துள்ளார்.

கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சில ஆயுதக் குழுக்களால் எமக்கு அச்சுறுத்தல்கள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில் எம்மால்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை சிவஞானம்
(பண்ணிசைப் புலவர்)

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் பண்ணிசைக் கச்சேரி, திருமுறை பஜனை, நாம பஜனை ஆகியவற்றின் மூலம் எமது ஆலயத்தை அலங்கரித்த பண்ணிசைப் புலவர் அமரர் வே.சிவஞானம் அவர்களின் திடீர் மறைவை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் இழப்பால் அல்லலுறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

366, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
தர்மபரிபாலன சபையினரும்,
சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லப்பா தங்கராசா

தோற்றம் 19★03★1916 . மறைவு 19★02★2008

ஓராண்டு காலம் ஓடி மறைந்ததையா
உன் திருமுகத்தை நாம் கண்டு
இன்னும் விழிகள் சொரிகின்றன -எம்
வேதனைகள் விலகவில்லை
உன் வரவிற்காய் வாசல் பார்த்து நிற்கும்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.




**மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த**
**உங்களின் பசுமை நினைவுகள்**
**எண்ணில் காலம் எங்கள் மனதில்**
**ஏற்றமாய் வீற்றிருக்கும்.**

எமது குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆவரங்கால், புத்தூர். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை மகேந்திரராணி (எப்ஷியா)



37, யாழ் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை மகேந்திரராணி நேற்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், வினோதகனியின் (றொபிட்டா தகவல் தொழில்நுட்ப பூங்கா, யாழ்ப்பாணம்) பாசமிகு தாயாரும், மல்லிகா, ஆனந்தன், மகாராசா, சந்திரன், தங்கத்துரை, சந்திரா, டெனிமாவதி (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.03.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு 37, யாழ் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் அப்போஸ்தல சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*37,யாழ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
றொபிட்டா *(மகள்)*.

அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க துறைசார் அனுபவம் பெற்ற விரிவுரையாளர்களால்
*Web Development,VB.net,IELTS* என்ற வரிசையில் மேலும் புதிய கற்கைநெறிகள்
- Diploma in Computer Hardware with Basic Networking [Start on 16,21 March] [Mon & Wed 9AM-4.30PM (1 Month),SAT 10.30AM-4.00PM(2 Month) (48 hrs)]
- Diploma in Computer Networking & Windows Server Administration [SUN 10.30-4.00 (2 Month) (48hrs)][Start on 22 March]
- Certificate in Internet Applications [Thursday 9AM-4.30PM (14 hrs)[Every Thursday]]
- Certificate in VB.net [Tuesday & Thursday 4.00-5.00PM (3Month)[10 March]]

**Why Speed IT net?**
# Free Internet Access # Library #Peaceful Environment #Limited Admission
# Fully networked Online Classes # Personal Care with Every Students.
For More Info Visit our Training Division Website:www.speedtech.info
**Register before Starting Dates!**
SPEED IT net "The Quick Way to Online" 72/28, பணிக்கர் லேன், பலாலி வீதி
திருநெல்வேலி(திருநெல்வேலி சந்தி அருகில்) பாதை மூடும் போது மாற்று வழி உண்டு.
தொலைபேசி:0214591871 / 0212228358 இணையத்தளம்: www.

## கோழிக் குஞ்சு விநியோகம்

**BAHIRA புறொயிலர் குஞ்சுகள் இன்று (09.03.2009) விநியோகிக்கப்படும்.**

**★ றாஜீவ் -**
**நவாலி வீதி,**
**ஆனைக்கோட்டை.**

## சிறப்புச் சொற்பொழிவு

மந்திகை,மார்ச் 9

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்குனி மாத வாராந்த சிறப்பு நிகழ்வுகள் வரிசையில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழ்.புதிய உயர் கலைக் கல் லூரி அதிபர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் ''பெரிய புராணம் காட்டும் சைவ நெறி'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(203-218)

## ஹொக்கி நடுவர்களுக்கான செயலமர்வு நாளை

யாழ்ப்பாணம்,மார்ச் 9

ஹொக்கி விளையாட்டு நடுவர்களாக கடமையாற்றுபவர்களுக்கான செயலமர்வுகள் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். மாவட்ட ஹொக்கி சங்கச் செயலாளர் ஆர்.குகன் கேட்டுள்ளார். (9)

## சென்.ஜோன்ஸ் கல்லூரி தமிழ்த் தினவிழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 9

சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த தமிழ்த் தினவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் க.உபமன்யு தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்கின்றார்.

(அ)

## ஜி.சீ.ஈ. சாதாரண தர பெறுபேறு விரைவில்

கொழும்பு, மார்ச் 9

அடுத்த பாடசாலை விடுமுறைக்கு முன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் மோசடியில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் மாணவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இவர்களில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் கூறினார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம் பெற்ற இப்பரீட்சைக்கு சுமார் 5 லட்சத்து 42 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

## அடுத்த சில நாள்களுக்கு இடியுடன் கூடிய மழை

அடுத்த சில நாள்களுக்கு நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் தென்கிழக்கு கடலோரப் பகுதிகளில் தாழமுக்கம் உருவாகியுள்ளதால் இக்கால நிலை காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இடி, மின்னல் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் மக்களை வானிலை அவதான நிலையம் கேட்டுள்ளது.

(அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை மார்க்கண்டு

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மார்க்கண்டு நேற்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் மகனும் அம்பலவாணர் - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும் வாசவிதாசன் (கனடா), சறோஜினிதேவி, ஜெகதீஸ்வரி, ஜயந்திராவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி (கனடா), காலஞ்சென்றவர்களான கதிரேசம்பிள்ளை, தில்லையம்பலம், அருணகிரிநாதன் ஆகியோரின் மாமனாரும் பத்மலோஜி, மோகனதாஸ், சுதாமினி, தயாமினி, லதாமினி, பிறேமதாஸ், நிருபராஜ், ரகுராஜ், ராதிகா, சுகிர்தா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2009) திங்கட்கிழமை சுழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கல்லை வளவு,*
*சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.*

தகவல்:
*மகள்மார்:* ஜெகதீஸ்வரி தில்லையம்பலம்,
ஜயந்திராவதி அருணகிரிநாதன்.

### பண்ணிசைப் புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம்



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் 14, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவஞானம் நேற்று முன்தினம் (07.03.2009) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் நீலாயதாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி தம்பதியினரின் அன்பு மருமகனும் Dr.சிவகிருபா (சிலாபம்), சிவபாலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மனோகரன் வெற்றிவேல் நிறுவனம்), சிவகேதீசன், சிவகலா (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோண்டாவில் சீ.சீ.த.க. பாடசாலை), Dr.சிவகோணேசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.சிவகீதா (யாழ்.மாநகர சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாம்பவதாஸ் (மருந்தாளர், சிலாபம்), மல்லிகா, சண்முகராசா (கிராமிய வங்கி, சுன்னாகம்), Dr.தாரணி (யாழ்.போதனா வைத்தியசாலை), முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பூமகள் (U.K), நாமகள் (கொழும்பு), சிவராஜா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கருணாகடாட்சி, நடராசா மற்றும் தியாகராசா, சிவராசா, வேல்தாசன், ஞானசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சத்தியா, சிவதாயினி, சிவசங்கர், சிவவாசினி, சுபப்பிரியன், மயூரி, மனாமிர்தன், சிவாம்சன், கோபிராம், மாதங்கி, தேஜஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (09.03.2009) திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14, கோபால் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.சிவபாலன் *(மகன்)*,
Dr.சிவகோணேசன் *(மகன்)*.

### நாகலிங்கம் அப்புக்குட்டி (கரம்பன்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கரம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது திருகோணமலையில் வசித்து வந்தவருமாகிய நாகலிங்கம் அப்புக்குட்டி 06.03.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகனும் பார்வதியின் அன்புக் கணவரும் மோகனா (திருமலை), அசோக்குமார் (ஜேர்மனி), விஜயகுமார் (ஜேர்மனி), உதயகுமார் (சுவிஸ்), சோபனா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் விக்ரர் (திருமலை), புஸ்பராணி (ஜேர்மனி), சுகுணா (ஜேர்மனி), இந்திராதேவி (சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் ஆருமை மாமனாரும் கண்ணன், ரவி, நிஷா, உஷா, கௌசி, சகானா, திவாகர், மயூரன், மயூரி, விதுஷா, பிரபாகர், மாதுரி, றஜினா, வேவி, பாஸ்கரன் ஆகியோரின் அருமைப்பேரனும் அஜித், சுஜித், கிஷோவன், டிலக்சனா, வைஷ்ணவி ஆகியோரின் பூட்டனும் அமரர் அரியகுட்டி, அமரர் தவமணி, செல்லம், குணம் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பூரணம், அமரர் துரை, தவராசா, கமலம், அமரர் அருணாசலம், பசுபதி, கணபதி, மாணிக்கம், வள்ளியம்மை, சின்னத்தங்கம், அமரர் நாகேசு, நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி, கனகம்மா, துரை, அமரர் முருகேசு, தையலம்மை, திருமகள், சொக்கலிங்கம், குஞ்சுமணி, இராசேந்திரம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*திருகோணமலை.* அ.ஜெயச்சந்திரன் *(மருமகன்)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நிலைமை திருந்தும் சாத்தியமுண்டா....?!

இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்று சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டூட்டு வலியுறுத்தியுள்ளார்.

இதற்கான முயற்சியில் உடனடியாக ஈடுபடுமாறு அவர் பிரிட்டனையே கேட்டிருக்கிறார். இது தொடர்பாக அவர் பிரிட்டிஷ் அரசுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் ஆதரவுடன் விவரம் அறியும் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டு - இலக்காக வைத்து - பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்குரிய அழுத்தத்தை கொடுக்குமாறு அவர் பிரிட்டிஷ் அரசைக் கோரியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சுயேச்சையான கண்காணிப்பாளர்கள் போர்ப் பிரதேசத்துக்குச் செல்வதற்குத் தடை விதித்துள்ளதால், அங்கு ஐ.நா.ஆதரவுடன் விவரம் அறியும் குழுவொன்றை அனுப்புவது அத்தியாவசியம் என்று சமாதானப் பேச்சாளர் பேராயர் டெஸ்ட்மண்ட் டூட்டு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையை உந்தித் தள்ள வேண்டிய தார்மீகக் கடமை ஒன்று பிரிட்டனுக்கு உண்டு என்பதனை பேராயர் உணர்ந்து தான் இந்தக் கோரிக்கையை அந்த நாட்டு அரசிடம் விடுத்திருக்கிறார் எனக் கொள்ளலாம். இலங்கையில் இருந்த இரண்டு அரசுகளை தமது நிர்வாகச் சுலபத்துக்காக இணைத்து, இப்போதைய இனப்பூசலுக்கும் பேரழிவுக்கும் வித்திட்டதில் அன்றைய பிரிட்டிஷ் அரசுக்குப் பொறுப்பு உண்டு. அதனால் இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் பேரழிவைத் தடுப்பதில் பிரிட்டனுக்கு ஏனைய நாடுகளை விடவும், பழைய வினையின் பெயரால், கர்மத்தின் வழிவந்த ஒரு கடமை உண்டு எனக் கருதியே பிரிட்டனிடம் இவ்வாறு முன்னின்று உழைக்குமாறு சமாதானப் பேராளர் டூட்டு கேட்டிருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம அதிகாரியான செயலாளர் நாயகம் பான் - கி - மூன், மோதலை நிறுத்துமாறும் மோதல் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்குமாறும் வேண்டுகோள்களை விடுத்து வருகிறாரே அன்றி, அதற் கான உந்துதலைக் கொடுத்து அவற்றை நடைமுறையாக்குவதற்கான காத்திரமான நடவடிக்கையில் இறங்குவதாக இல்லை.

மேலும் ஐ.நா.அதிகாரிகள் இப்போது வெளியிட்டு வரும் கருத்துக்களை ஊன்றி - ஆழ்ந்து - நோக்கினால், போர் நடைபெறும் பிரதேச மக்களின் அவலங்களை ஐ.நா.சபை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதோடு மட்டுமே தனக்குரிய பணியை மட்டுப்படுத்தி விட்டதோ என்ற சந்தேகம் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் வலுத்து வருகிறது.

ஆகையால் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் இது குறித்து உள்ளார்ந்த உணர்வுடன் செயற்பட்டு, போரை நிறுத்துவதற்கு இரண்டு தரப்புகள் மீதும் அழுத்தம் கொடுக்க வகை செய்தால் மட்டுமே, மக்கள் அழிவை, அவர்களின் பேரவலத்தைத் தடுக்க முடியும்.

பாதுகாப்புச் சபையிலும் கூட ஏதோ ஒரு நாடாவது இது விடயத்தை முன்னெடுப்பதற்கு முனைப்புடன் செயற்பட வேண்டும். அதற்குப் பொருத்தமான நாடு பிரிட்டனே என்று பேராயர் டெஸ்மண்ட் டூட்டு கருதினார் போலும். பிரிட்டனிடம் அதற் கான தகுதியும், வலுவும், உணர்வும் உண்டு என்றும் பேராயர் நம்புகிறார்.

ஆனால், அது சாத்தியமா என்பதற்குப் பதில் இல்லை என்றே கருத வைக்கிறது. கடந்த வாரத்தில் ஐ.நா.பாதுகாப்புச்சபையில் இலங்கை நிலைமை குறித்து, இங்கு விஜயம் செய்து திரும்பிய மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் அறிக்கை ஒன்றை உத்தியோக பூர்வமாகச் சமர்ப்பித்துப் பேசினார்.

அதன் பின்னர் பிரிட்டிஷ் பிரதிநிதியோ அல்லது அமெரிக்கா போன்ற வேறெந்த நாட்டின் பிரதிநிதியோ இலங்கையில் - வன்னியில் - மனிதாபிமானப் பேரவலம் ஒன்று நிகழ்ந்துகொண்டிருப்பதை அடிப்படையாக வைத்து வாயைக் கூட அசைக்கவில்லை.

ஏற்கனவே இப்பத்தியில் முன்னர் ஒரு தடவை சுட்டிக்காட்டியது போன்று, வன்னி விடயத்தில் முன்னொரு தடவை எடுத்த முயற்சியை இலங்கை அரசு உதாசீனம் செய்து கேவலப்படுத்தியமை பிரிட்டனின் மனதை ஆழமாகத் தைத்திருக்கலாம்.

ஆம், இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கென - இல்லை, இல்லை உதவுவதற்கென - பிரிட்டிஷ் பிரதமர் விசேட தூதுவரை நியமித்ததை, கொழும்பு அரசு நிராகரித்த செயல், பிரிட்டனின் மனதில் வடுவை ஏற்படுத்தியிருக்கலாம். அது மனித இயல்பே.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் - பின்புலத்தில்- முல்லைத்தீவு மக்களின் பேரவலம் நீங்குவதற்கான வழி ஒன்று பிறக்கும் என்று எண்ணத் தோன்றவில்லை. நாளாந்தம் அவர்களைப் பற்றிய சோகச் செய்திகளைக் காதால் கேட்பதைத் தவிர, ஒரு மாற்றம் வராதா என்று மனம் ஏங்குவதைத் தவிர, எதுவுமே ஆக்கபூர்வமாக, அதிரடியாக நடைபெற சர்வதேசம் உதவமாட்டாது என்ற நிலையே தொடர்கிறது.

# கிரிக்கெட் வீரர்களைக் கடத்தி பெரிய அளவில் பேரம் பேசுவதற்குரிய முயற்சி நடந்ததா?

**"சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் 08.03.2009 அன்று வெளிவந்த அரசியல் விமர்சனக் கட்டுரையின் தொகுப்பு**

யானைகள் மோதிக் கொண்டால் எறும்புகள் தான் மிதிபட்டு நசுங்கிப் போகும் என்று பழமொழி ஒன்று இருக்கிறது.

இன்று, ஆயுத வல்லரசுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 'குளிர்யுத்தம்' விரிவடைந்து கொண்டு போகும் நிலையைப் பார்த்தால் இந்தப் பழமொழி சரியானது தான் என்று சொல்லத் தோன்றுகிறது. அணு ஆயுதத் துகள்கள் இலங்கையின் மீது தான் விழப்போகின்றன என்று தோன்று கின்றது.

அநேக அவதானிகளும் விமர்சகர்களும் ஏன் சாதாரண மக்களும் கூட லாகூர் சம்பவத்தை ஒன்றில் இஸ்லாமாபாத் நிலைப்பாட்டில் அல்லது புதுடில்லியின் நிலைப்பாட்டில் வைத்துத்தான் எடை போடுகிறார்கள். அமெரிக்காவில் அதிகாரபூர்வ அறிக்கையும் கூட பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சின் கருத்தை அங்கீகரிப்பது போல் அமைந்திருந்தது. பாக் - இலங்கை உறவை சீர்கெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என வர்ணிக்கப்பட்டிருந்தது. இந்தியா மீதான ஒரு நேரடித் தாக்குதலாகும் இது. இவ்வாறு வெளியான பல்வேறு அபிப்பிராயங்களில் சில சிந்தனையைத் தூண்டுபவையாக இருந்ததுடன் ஏனையவை ஏழனத்துக்குரிய வெறும் குப்பை என்றுதான் கூற வேண்டும்.

இந்த யதார்த்த நிலை குறித்து ராஜபக்ஷ நிர்வாகம் தெளிவாகவே இருப்பதாகத் தெரிகின்றது. லாகூர் சம்பவம் குறித்த முழுமையான விசாரணை நடைபெறுவதை இலங்கை விரும்புகின்றது. புதுடில்லி - இஸ்லாமாபாத் விவகாரங்களில் இருந்து ஒதுங்கியிருக்கவே இலங்கை விரும் புகின்றது. புலிப்போராளிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் போரில் பாகிஸ்தானைப் போலவே இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவளித்து வருகின்றது. பாகிஸ்தானைப் போலன்றி இந்தியாவின் ஆதரவு பெரும் பாலானவை வெளிப் படையாக அல்லாமல் மறைமுகமாகவே வழங்கப்பட்டு வருகின்றது.




ஹைதராபாத்திலுள்ள வெளிநாட்டு மொழிகளுக் கான பல்கலைக் கழக மாணவர்கள் லாகூரில் இடம் பெற்ற இலங்கைக் கிரிக்கெட் அணியினர் மீதான தாக்கு தலைக் கண்டித்து பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலைமை காரணமாகத் தான் லாகூர் சம்பவம் தொடர்பான சர்வதேசத் தொடர்புகள் பற்றிய விசாரணைகள் பிராந்தியத்துடன் அன்றி விரிவாக்கப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று போகொல்லாகம பாகிஸ்தான் அதிபர் சர்தாரியிடம் கூறியிருக் கின்றார். நாம் எந்த சார்பு நிலையையும் ஏற்றுக் கொள்வதாய் இல்லை என்பதைத் தெளிவாகக் கூற விரும் புகின்றோம். இதற்குப் பொறுப்பானவர்கள் யார் - அதன் நோக்கம் என்ன என்பதை அறியவே விரும்புகின்றோம் என்று இலங்கை அமைச்சர் கூறியிருப்ப தாகத் தெரிகின்றது. இந்த விடயத்தில் ராஜதந்திர குழப்பம் ஒன்றை கிளப்பி விடுவதற்கான முயற்சி ஒன்று நடைபெற்றிருப்பது பற்றியும் அரசக்குத் தெரிந்திருந்தது என்று ஊடகங்கள் தெளிவுபடுத்தியிருந்தன. கிரிக்கெட் வீரர்களைக் கடத்திச் சென்று பெரிய அளவில் பேரம் பேசு வதற்கான முயற்சியையும் தாக்குதல் நடத்தியவர்கள் எடுக்கவிருந்ததாக அறிய வந்துள்ளதால் இதில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று அரசு கருதுவதாகத் தெரிகிறது. இந்த வகையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசை அடி பணிய வைக்கும் நோக் கம் இருந்திருக்கலாம் என்று கருதப்படு கின்றது.

லாகூர் சம்பவமானது இலங்கையின் உள்ளக அரசியலில் இருந்து வேறுபட்டதாகும்.

கிரிக்கெட் வீரர்கள் மீதான தாக்குதலைப் பற்றி கேள்விப்பட்ட உடனேயே ஜனாதிபதி தமது பயணத்தை இடைநிறுத்திக் கொண்டு நாட்டுக்குத் திரும்பி வந்தார். புத்தர் பிறந்த இடமான லும்பினிக்கும் கூட அவரால் விஜயம் செய்ய முடியாமல் போய் விட்டது. அந்தப் புனித பயணத்தில் பாதுகாப்பு விடயங்களும் முக்கிய அம்சமாகக் கருதப்பட்டிருப்பதாக இங்கு கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்றுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ ஆலோசனைகள் நடத்தினார். மத்திய மற்றும் மேல் மாகாணத் தேர்தல்கள் நடைபெறவிருந்த வேளையில் அரசு ரூபாயின் மதிப்பைக் குறைக்க அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை நாட யோசித்துக்கொண்டிருக்கிறது என்ற செய்தியை கடந்த மாதம் மத்திய வங்கி மறுப்பதற்கு பெரும்பாடு பட்டுள்ளது. இந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1.9 பில்லியன் (ரூபா 200 பில்லியன்) அமெரிக்க டொலர் கடன் கேட்டு விண்ணப்பித்திருப்பதாக அரசு அறிவித்தது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை அரசு ஒன்று கடன் கேட்டு விண்ணப்பித் துள்ள மிகப்பெரிய தொகை இதுவா கும். அரசின் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதை அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

(ப)

**சுயாட்சியா, பூரண சுதந்திரமா**

# தமிழர் மத்தியில் கருத்துக்கணிப்பை ஐ.நா.ஆதரவில் நடத்தக் கோரிக்கை

**அமெரிக்க ஜனநாயகக் கட்சி மாகாணக் குழு தீர்மானம்"**

வாஷிங்ரன்,மார்ச்9

தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் முழுமையான சுதந்திரத்தை விரும்புகிறார்களா அல்லது சுயாட்சியை விரும்பு கிறார்களா என்பதை அறிய அந்த மக்கள் வாழும் பகுதிகளில் கருத்துக் கணிப் பொன்றை நடத்துமாறு இலங்கை அரசாங் கத்தையும் ஐ.நா.வையும் கேட்டுக் கொள் ளும் தீர்மானம் ஒன்றை அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சாந்தா கிளாரா மாகாண மத்திய குழு நிறைவேற்றியுள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பு ஐ.நா.கண்காணிப்பில் நடைபெற வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாண குழுக்களையும் இவ்வாறான தீர்மானங்களை நிறைவேற்றும்படி கோரப் போவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயகக் கட்சியின் முக்கிய கொள்கை பிரச்சினையாக இலங்கை விவகாரத்தை உருவாக்குவதற்காக இவ்வாறு செய்யப்படவிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

இலங்கைத் தீவில் (தற்பொழுது சிறிலங்கா என்றழைக்கப்படுவது) 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரான சிங்களவர்களும் தமிழர்களும் வாழ்ந்து வந்துள்ளார்கள். ஐரோப்பிய ஆக்கிரமிப்பு நடைபெறும் வரைக்கும் இந்த நிலை நீடித்திருந்தது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் தமது சொந்த ஆட்சியை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் போராடி வருகின்றார்கள். இந்தப் போராட்டத்தில் சுமார் 100 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தமிழர் பிரச்சினையை இலங்கை அரசாங்கத்தினாலும் தமிழர் கட்சிகளாலும் தீர்த்துக் கொள்ள முடியாமல் போயுள்ளது. பொருத்தமான அரசியல் மாற்றுத் திட்டம் ஒன்றை முன் வைக்கவும் தவறியுள்ளார்கள். கொலைகள், அழிவுகள் மற்றும் மக்கள் துன்பங்கள் தங்குதடை யின்றி நீடித்துக் கொண்டே இருக்கின்றன.

இந்நிலையில் சாந்தா கிளாரா மாகாண ஜனநாயகக் கட்சி அமெரிக்க காங்கிரசையும் சமஷ்டி நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்வது என்னவென்றால் உடனடியாக தமிழர்கள் கோருகின்ற சுதந்திரத்துக்கு மாற்றீடான சுயாட்சி அரசியல் பொதியொன்றை முன்வைக்குமாறு வற்புறுத்த வேண்டும்.

அதேசமயம் தமிழ் பகுதிகளில் வாழ் கின்ற தமிழ் மக்கள் சுயாட்சியை விரும் புகிறார்களா அல்லது முழுமையான சுதந் திரத்தை விரும்புகிறார்களா என்பதைக் கண்டறிய ஐ.நா.வின் கண்காணிப்புடன் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தும்படி இலங்கை அரசாங்கத்தையும் ஐ.நா. வையும் வற்புறுத்த வேண்டுமென அமெரிக்க காங்கிரஸ் சபையையும் சமஷ்டி அரசாங்கத்தையும் சாந்தா கிளாரா மாகாண ஜனநாயகக் கட்சி கேட்டுக்கொள்கிறது - என்று உள்ளது. (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி 26 | 10.03.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்தசி மு.ப. 10 வரை |
| நட்சத்திரம்: | மகம் மு.ப. 09.14 வரை |
| சுபநேரம்: | 10.53 - 12.23 |
| ராகுகாலம்: | 03.23 - 04.53 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள் யாழ்.பல.நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய்த் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.பல.நோ.கூ.சங்கத் தலைவர் ப.கிரிதரன், மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிரானி மில்ஸ், யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் ஆறு படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் இடம்பெற்ற நடனக் காட்சி ஒன்றையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஷ்மன், நந்தன்)*

# சேவையில் இருந்து ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் பெற்றுக்கொள்ளாத லீவுக்குப் பதில் கடமை புரியலாம்

அச்சுவேலி, மார்ச் 9

சேவையில் இருந்து ஓய்வுபெறும் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பெற்றுக்கொள்ளாத லீவு நாள்களுக்கு ஓய்வூதியக் காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 2006ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ளாத லீவுகளுக்கு சம்பளம் மேலதிகமாக வழங்கப்பட்டது.

இந்த நடைமுறை 2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளாத லீவுகளுக்கு ஓய்வுபெறும் போது மேலதிகமாக 61 வயதுவரை கடமை புரிந்து ஓய்வூதியத்துக்கு மேலதிக மாக ஊதியத்தைப் பெற வகைசெய்யப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 24/2007 சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறையில் உள்ளது.

பெற்றுக் கொள்ளாத லீவுக்கு மேலதிகமாக கடமையாற்றி ஊதியம் பெறும் நடைமுறையின் பிரகாரம்- 2007ஆம் 2008ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளாமல் மிகுதியாக இருக்கும் லீவு நாள்களின் எண்ணிக்கை விவரத்தை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன், பி-100 படிவத்தில் பெற்று, அதற்கான விண்ணப்பப் படிவத்தின் மூலம் திணைக்களப் பணிப்பாளர் ஊடாக மாகாண அமைச்சின் அனுமதியைப் பெற்று, ஓய்வுபெறும் போது கடமையாற்றிய அலுவலகத்தில் அல்லது பாடசாலைகளில் தொடர்ந்து கடமை புரியலாம்.

30 தினங்கள் பெற்றுக் கொள்ளாத லீவு இருப்பின் ஒரு மாதமும் 60 தினங்கள் இருப்பின் 2 மாதமும் அதே போன்று இருக்கின்ற ஒவ்வொரு தினத்திற்கும் மேலதிகமாக கடமை புரிந்து அதற்கான ஊதியத்தை மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டவர்கள் 2009ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் இதே நடைமுறையில் பெற்றுக்கொள்ளாத லீவுக்கு மேலதிகமாகக் கடமைபுரிந்து அதற்குரிய ஊதியத்தையும் மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உரிய முறையில் முன் அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர் கடமை புரிந்தால் மட்டுமே கடமை நாளுக்குரிய ஊதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(203-11)

## "பட்டாம் பூச்சிகள்" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நாகேந்திராவின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ''பட்டாம் பூச்சிகள்'' (அபிநயப்பாடல் தொகுப்பு) ஒலி, ஒளி இறுவெட்டு, நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், வலிகாமக் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203-9)

# வருண பகவானுக்கு விடுதலை கிடைத்த நாள்

*மாசி மகம் புண்ணிய தீர்த்தம் ஆடல், விரத அனுஷ்டானங்களுடன் வழிபாடு செய்தல் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றது. தக்கனது மகளான தாக்ஷாயணி பிறந்தது மாசி மாத மக நக்ஷத்திரத்திலேயாம். முன்னொருநாள் வருண பகவான் பிரம்ம ஹத்தி தோஷத்தினால் பீடிக்கப்பட்டு இருந்த வேளை அவர் கட்டப்பட்ட நிலையில் சமுத்திரத்தில் இடப்பட்டிருந்தார். பின்னர் தேவர்கள் சிவ பிரானை [illegible] அவர் எழுந்தருளி வந்து வருணபகவானை விடுவித்தார். இந் நாள் மாசி மகத் திருநாளாகும். இவ்வேளையில் சிவபெருமானிடம் வருணபகவான் ஒரு வேண்டுதல் செய்தான்.*

**இன்று மாசி மகம்**

*எவ்வண்ணம் சமுத்திர நீரில் இருந்தமையால்தான் எம்பெருமானின் அருளைப் பெற்றானோ அதேபோன்று மாசி மக நாளில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வழிபாடு செய்வோருக்கும் அருளல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். மாசி மக நட்சத்திரம் பிரகஸ்பதியுடன் கூடி கும்ப ராசியுட் பிரவேசிக்கும் போது மஹா மகம் நிகழ்கின்றது. வட இந்திய இந்துக்கள் கும்பமேளா எனக் கூறி இத்தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடி கங்கா தீர்த்தம் ஆடுவர். அதேபோல தென் இந்தியக் கும்பகோண க்ஷேத்திரத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்தில் சகலரும் நீராடி சிவ வழிபாடு செய்வர். இதனையொட்டி எல்லாச் சிவாலயங்களிலும் விசேஷ பூஜை மாசி மகத்தில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மாத்தளை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மாசிமக உற்சவம் பஞ்சரதபவனியுடன் சிறப்புற நடைபெறுகின்றது.*

### பாசத்தளை பற்றறுக்கும் மாசிமகத் திருநாள்

மாசித்திங்கள் மகநட்சத்திரத் திருநாள்
மக்கள் பாசப்பற்றறுக்கும் மகேசன் பெருநாள்
வருணனின் பிரம்ஹத்திதோஷப் பீடிகையை
விட்டொழிக்க வென்று தேவர் வேண்டி நின்ற போது
கருணையே வடிவான கருணாமூர்த்தி நின்
கடைக்கண் பார்வை பெற்றருள் பெற்ற நன்னாள்
கணக்கில்லா ஆசைதனை விதைத்து நின்று
திசையில்லா வாழ்வதனை திருப்தியென்று
பாசத் தளைகளுள் தினமும் சிக்கித் தவித்தே
பாரிய வாழ்வதன் பொருளறியாது
மாளுவர் ஆயிரம் மானிடர் தினம்
பெரியவர் இவர் சிறியோர் அவர் என்றே
அகம் தனில் மமதை கொண்ட மானிடரின்
சிந்தை தெளியவென்று சிறப்புற்ற ஒருநாள்
மாதொரு பாகனின் மலர் பாதம் பற்றி
மாசி மகத் திருநாளில் அவனருள் பெற்றிட
பாசமாய் பற்றறுத்துப் பாரிக்குமாரியவன்
மோட்சம் பெற்றிட [illegible] வழிபடுவோம்
[illegible]

# தவக்காலச் சிந்தனை



## "மன்னியுங்கள்! மன்னிப்புப் பெறுவீர்கள்!"

தபக்காலம்; மன்னிப்பின் காலமாகவும் விளங்குகின்றது. காரணம் இறைதந்தை எப்போதும் எமது பாவநிலைகளில் இருந்து எம்மை மன்னிக்கத் தயாராக இருக்கிறார். எமது எதிர்பார்ப்பும் அதுவே! ஆனால், 'நான்' என் சகோதரனை, அயலவனை மனப்பூர்வமாக மன்னிக்கத் தயாரா? என்பதே ஒவ்வொருவரும் தம் உள்ளத்திலிருந்து எழுப்ப வேண்டிய இக்கால வினா.

''மன்னிப்பு! மன்னிப்பு! மன்னிப்புத் தாருமே இறைவா!'' என்று பாடல் வரிகளை வெறும் உதட்டளவில் பாடினால் மட்டும் போதுமா? அல்லது 'மன்னிக்கத் தெரிந்த உள்ளம்; மாணிக்கக் கோயிலடா? என்ற அழகிய வார்த்தைகளை அடுக்கினால் மட்டும் போதுமா? மாறாக, 'உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்' என்ற இறைவனது செய்தியை வாழ்வதில் தான் மன்னிப்பின் செயல் எம்மில் துலங்கும். அடிமட்டக் குடும்ப உறவிலிருந்து ஆளும் தலைவர்கள் வரை மன்னிப்பின் அவசியம் பற்றிப் பேசப்பட்டாலும் அதனை எம்மில் உள்வாங்கிச் செயலாற்ற நாம் தயாரா? குடும்ப உறவுகளில் மன்னிப்பு இல்லையேல் அங்கு உறவு குலைக்கப்படுகிறது. சமூக உறவுகளில் மன்னிப்பு இல்லையேல் ஆரோக்கியமான இனம் உருவாக முடியாது. ஏற்றத் தாழ்வுகள் தலைவிரித்தாடுகின்றன. ஆளும் தலைவர்களுக்கிடையில் மன்னிப்பு இல்லையேல் அநீதக் கொலைகளே மலிகின்றன.

மன்னிப்பு என்பது பிரதிபலன் நோக்காக தியாகத்தின் வெளிப்பாடாக உருவாகாவிடில் அஃது பலன் கொடுக்க முடியாது. அதனையே இயேசு சிலுவையில் தம் தியாகத்தால் வெளிப்படுத்தினார். தம்மைச் சிலுவை அறைந்து கொன்றவர்களை மன்னித்தது மட்டுமன்று; அவர்களின் மீட்பிற்காகவும் தந்தையை நோக்கிச் செபித்தார்.

இத்தகைய மனநிலையை நாமும் உள்வாங்கவே இத் தபக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே பிறரையும் மன்னித்து, நாமும் இறை மன்னிப்புப் பெற்றிட, எம்மிலே உள்ள பகைமை உணர்வுகள், பழிவாங்கும் தன்மைகள், அநீத கொடுமைகள் என்பவற்றை முற்றாக நீக்கி, எமது பார்வையால், வார்த்தையால், செயலால் அர்ப்பணிப்பால் ஏற்றுக் கொள்ளுதலால், பொறுப்புணர்வினால், ஆழ்ந்த அன்பினால், பிரதிபலன் நோக்காத உதவியினால் ஒருவர் ஒருவரை மன்னிப்போம், மறப்போம். அவர்கள் குற்றங்களை, அதனால் தந்தையின் இரக்கத்தைப் பெறும் அன்பின் சமூகமாக எம்மையே இந்தத் தபக்காலத்தில் மாற்றி வாழ்வோம்.

எஸ்.எம்.புளோறன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் பகுதிகளில்

# சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளதாக படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

கோப்பாய், மார்ச் 9

கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் பகுதிகளில் சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக படையினர் இப்பகுதிகளில் ஒலிபெருக்கிக் கருவிகள் மூலம் பொது மக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளனர்.

இக் கிராமங்களில் கசிப்புப் பாவனை, சூதாட்டம், வீதிகளில் பெண்களைத் தகாத வார்த்தைகளால் பேசுதல், பகலிலும் இரவிலும் பொது இடங்களில் கும்பல் கும்பலாக கூடி நிற்றல் போன்ற விடயங்களைத் தாம் அவதானித்துள்ளனர் எனவும்-

இத்தகைய சமூக விரோதச் செயல்களைத் தவிர்த்துக் கொள்வதுடன் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்களைப் பற்றித் தமக்கு அறியத்தருமாறும் கோரியுள்ளனர்.

அத்துடன் ஊரடங்கு வேளைகளில் வீதிகளில் நடமாடுவதையும் தவிர்த்துக் கொள்வதுடன் இக்கிராமங்களில் புதியவர்கள் நடமாட்டம் காணப்பாட்டால் உடன் தமக்கு அறிவிக்குமாறும் இப்பகுதி மக்களைப் படையினர் கோரியுள்ளார்கள். (203-51)

# குடாநாட்டில் சேதமடைந்த வீதிகள் தார் கலவைகள் மூலம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

குடாநாட்டில் சேதமடைந்த வீதிகள் தார் கலவைகள் மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கையிருப்பில் இருக்கும் தார் மூலம் வீதிகளில் ஏற்பட்டிருக்கும் குழிகள் மற்றும் சேதமடைந்த பகுதிகள் மட்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தார் முழுமையாக வந்து சேர்ந்த பின்னரே வீதிகள் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை- தீவுப் பகுதியில் புங்குடு தீவு-குறிக்கட்டுவான் வீதி, மண்டைதீவு சந்தி வரையான வீதி ஆகியனவும் புனரமைக்கபட்டு வருகின்றன. (203-224)

## ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோர் அதிகரிப்பு

கோப்பாய், மார்ச் 9

இலங்கை சமூக பாதுகாப்பு சேவையின் ஓய்வூதியத் திட்டத்தில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டு இதுவரை காலப்பகுதியில் 113 பேர் இணைந்துள்ளனர்.

நாளாந்தம் சுயதொழிலில் ஈடுபடுவோர் மிகுந்த ஆர்வத்துடன் இத்திட்டத்தில் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த டிசம்பர் மாத்திற்கு முதல் இத்திட்டத்தில் இணைந்த அனைவருக்கும் பணவைப்புப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் தத்தமது பகுதியில் உள்ள தபாலகங்கள் ஊடாக இத்திட்டத்தில் தமக்குரிய கட்டுப்பணத்தை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-72)

## சுழிபுரம் முகாம் இடம் மாற்றப்பட்டது

சுழிபுரம், மார்ச் 9

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட முகாமில் தங்கியிருந்த இருபதுக்குட்பட்ட குடும்பங்கள் வேறு இடத்தில் அனைத்து வசதிகளுடன் குடியமர்த்தப்பட்டுள்ளன.

மேற்படி முகாம் அமைந்திருந்த நிலம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஸ்தாபருக்கும் சொந்தமானது.

இந்த நிலத்தை கல்லூரித் தேவைக்கு பயன்படுத்த உரியவர்கள் வழங்கியுள்ளனர்.

கல்லூரி நிர்வாகத்தினர் வைபவ ரீதியாக நிலத்தை விரைவில் பெற்றுக் கொள்ளவுள்ளதன் காரணமாக மேற்படி முகாம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது. (201-28)

## ஒய்வூதிய பயனாளிகளுக்கு தவணைக் கட்டணப் புத்தகம்

மண்டுவில், மார்ச் 9

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2008 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட பயனாளிகளுக்கான தவணைக் கட்டணப் புத்தகங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை நாளை மறுதினம் புதன் கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (203-59)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு மூன்று மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்.9

சமுர்த்தி பயனாளிகளுக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கான உணவு விநியோகம் ப.நோ. கூ.சங்கங்கள் ஊடாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதுவரை 1015 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைப் பெற்ற பயனாளிகளுக்கு 50 சதவீத அதிகரிப்புடன் கூடிய 1500 ரூபா பெறுமதியான முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு வழங்கப்ப டும் கிலோ ஒன்றிற்கான கப்பல் கட்டண கூலி 7/= மாவட்ட செயலகத்தால் பொறுப் பேற்கப்பட்டுள்ளதால், சமுர்த்திப் பயனாளிகளின் பொருள்கள் வழமையைவிட குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன என்று அரச அதிபர் தெரிவித்தார்.

அட்டவணையில் குறிப்பிட்ட அளவு பிரமாணத்தில் மூன்று மாதத்திற் குரிய உணவுப் பொருள்கள் சேர்த்து வழங்கப்படவுள்ளன. உணவுப் பொருள் விநியோகத்திற்கான விநியோகப் பட்டியல் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளது. விநியோகப் பட்டியல் விவரம் வருமாறு:- (1)

| மூன்று மாதத்திற்குரிய உணவுப் பொருள்கள் | விலை | முத்திரை பெறுமதி விவரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1500/= | 900/= | 525/= | 375/= | 615/= | 350/= | 250/= |
| அரிசி (Kg) | 72/= | 23.80 | 15.15 | 11.35 | 8.80 | 10.85 | 8.65 | 6.25 |
| மா (Kg) | 64/= | 17.0 | 10.0 | 7.0 | 5.0 | 6.0 | 4.0 | 2.0 |
| சீனி (Kg) | 73/= | 5.0 | 3.0 | 2.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 |
| பருப்பு (Kg) | 133/= | 2.0 | 1.0 | 1.0 | 0.5 | 0.5 | 0.5 | 0.5 |



ஊர்காவற்றுறை சென்மேரிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கான கால்கோல் விழாவில் எடுக்கப்பட்ட படம்.

மாணவர்களுடன் பங்கேற்ற ஜேம்ஸ் அடிகளார் மற்றும் தீவக கல்வி வலய கணனி ஆசிரிய ஆலோசகர் ஆகியோரும் அமர்ந்திருப்பதையும் அதிபர் அருட்சகோதரி எலிசபெத் அம்மா உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். *(படங்கள்:நேசன்)*

## பாராட்டு விழா

வடமராட்சி, மார்ச் 9

கரவெட்டி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் ம.குட்டித்தம்பியின் பாராட்டு விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதி அதிபர் மு.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொள்வர்.(சிறப்பு மலர் 7 ஆம் பக்கத்தில்) (203-236)

## தென்மராட்சியில் ஓட்டோக்களுக்கு மானிய விலையில் பெற்றோல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தென்மராட்சி பிரதேச ஓட்டோக்களுக்கு மானிய விலையில் பெற்றோல் பெறுவதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச ஓட்டோக்களின் உரிமையாளர்கள் பிரதேச செயலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அந்தந்தப் பகுதி சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் ஒப்படைத்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பொதுமக்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மாதாந்தம் 75 லீற்றர் பெற்றோல் 20 ரூபா வீதம் குறைத்து பெறுவதற்கு அனுமதி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## பாரவூர்திகளின் தரிப்பிடம் தெல்லிப்பழையில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

தெல்லிப்பழையில் தனியார் பாரவூர்திகள் தரித்து நிற்கும் இடம் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களை ஏற்றி, இறக்கும் பணியில் ஈடுபடும் இந்தப் பாரவூர்திகள் பாதுகாப்பாக தரித்து நிற்பதற்கு வசதியாக இந்தப் பகுதி சிமெந்துக் கலவையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (203-224)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ்.நகர்ப் பகுதியில் காணமல் போன சைக்கிள் மானிப்பாயில் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 9

கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ். நகரப் பகுதியில் காணமல் போன மானிப்பாய் வாசியினுடைய சைக்கிள் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் மானிப்பாய்ச் சந்தைப் பகுதியில் மீட்கப்பட்டது.

தனது சைக்கிளை இனங்கண்டு கொண்ட சைக்கிள் உரிமையாளர் அப்பகுதி இளைஞர்களையும் அழைத்து சைக்கிளை மீட்டதோடு சைக்கிள் வைத்திருந்தவரை நையப்புடைத்த பின்னர் அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினரிடம் அவரை ஒப்படைத்தனர் என்றும் கூறப்பட்டது. (203-7)

# மாணவ முதல்வர்கள் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டிகளாகச் செயற்பட வேண்டியது அவசியம்

### தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

ஆனைக்கோட்டை, மார்ச் 9

பாடசாலைகளில் மாணவ முதல்வர்கள் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பதோடு அவர்களை வழிப்படுத்துபவர்களாகவும் திகழ வேண்டும்.

தீவக வலயக் கல்வி அலுவலக (அபிவிருத்தி) பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ் மேற்கண்டவாறு மாணவர்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மேலாக பெற்றோரும், நலன் விரும்பிகளும் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இம்மாணவர்கள் ஈட்டிய வெற்றிகள், சாதனைகள், பெறுபேறுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே இன்று மாணவர் தலைவர்களாக சின்னஞ் சூட்டப் பெற்றிருக்கிறார்கள்.

ஏனைய மாணவர்களும் சாதனை வீரர்களாக, வெற்றியாளர்களாக மிளிர்ந்து எதிர்காலத்தில் சமூகத்திற்கு ஏற்ற சிறந்த பிரஜைகளாக உருவாக வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர் முதல்வர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பாடசாலையின் செயற்பாட்டிற்கு உழைக்க வேண்டும்.

பிள்ளைகளின் விடயத்தில் பெற்றோர் அக்கறையுடனும் அவதானிப்புடனும் செயற்பட வேண்டும்.

அவர்கள் தமது பிள்ளைகளுக்கு நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதோடு சிறந்த வழிகாட்டியாகச் செயற்பட வேண்டும்.

தலைமைப் பண்புகளை வளர்ப்பது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். சிறந்த தலைமைத்துவப் பயிற்சிகளை இம் மாணவர்களுக்கு வழங்குவதற்குரிய செயற்பாடுகளை பாடசாலகளின் அதிபர், ஆசிரியர்கள் மேற்கொள்ள முன்வர வேண்டும்- என்றார்.

கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் காரைநகர் சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் ப.ஐங்கரன் சிறப்பு விருந்தினராகவும், கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை செல்வி ஆ.வைரமுத்து கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (203-20)

## போயா தின ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் ஓம்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன. (9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

09-03-2009 முதல்
15-03-2009 வரை

பொ.சந்திரலிங்கம்



மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகஈடுபாடு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



இடபம்

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகஈடுபாடு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.



மிதுனம்

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். மன அமைதி இருக்காது.



கடகம்

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.



சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். உறவினர், அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். மன அமைதி இருக்காது.



கன்னி

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.



துலாம்

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.



விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.



மகரம்

உத்தராடம் 2, 3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.



கும்பம்

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உண்டு. மன அமைதி இருக்காது.



மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாக னம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி இராசரத்தினம் பாக்கியம்



| | |
|---|---|
| பத்து மாதம் எமைச்சுமந்து | ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன |
| பக்குவமாய் வளர்த்தெடுத்து | அவை அனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ |
| பார்புகழ நாம் வாழ வழிவகுத்த | அகிலத்தை விட்டு அகன்றே சென்றாலும் |
| அன்னையே தெய்வம் அம்மா! | அழியாது உம் நினைவு எமை விட்டு |
| ஓடி நீங்கள் சென்ற நாள் | ஆண்டவன் திருவடியில் இருந்து |
| ஒரு மாதம் ஆனதம்மா | ஆறுதல் பெறவும் உங்கள் ஆத்மா |
| இன்று போல் இருக்குதம்மா | சாந்தி பெறவும் அந்திரான் முருகனைப் |
| எமை வளர்த்த காட்சியெல்லாம் | பிரார்த்திக்கின்றோம். |

கடந்த (07.02.2009) சிவபதமடைந்த எங்கள் குடும்பச் சிகரத்தின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், மேலும் பல வழிகளில் உதவிபுரிந்த அன்பு உள்ளங்களுக்கும், மற்றும் அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அருகிலிருந்து இரவு பகல் பாராது உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும், வைத்தியர்களுக்கும், தாதியர்களுக்கும், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (09.03.2009) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

*என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

முருகமூர்த்தி கோயில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய். (83334)

மண்ணுலகில்
29.05.1937

விண்ணுலகில்
07.02.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி

## அதிபர் திரு.ம.குட்டித்தம்பி அவர்களின் சேவை நயப்பு விழா சிறப்புமலர்

## 09.03.2009

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.ம.குட்டித்தம்பி அவர்கள் 09.03.2009 அன்று தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச செல்வதை இட்டு முன்னெடுக்கப்படும் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு மனிதனது மதிப்பான செழிப்பான அமைதியான வாழ்க்கை வளர்ச்சிக்கு பற்பல காரணிகள் ஏதுவாக இருப்பினும் முதற்காரணியாக இருப்பது கல்வியறிவு என்பது வெள்ளிடைமலை. அத்தகைய கலவி அறிவை 1974 இல் ஆசிரிய சேவையில் இணைந்து மாணவர்களுக்கு புகட்ட ஆரம்பித்த திரு.ம.குட்டித்தம்பி அவர்கள் கல்வித்துறையின் வளர்ச்சிக்கும்,மேம்பாட்டிற்கும் ஆற்றிய கல்விப் பணியின் வெளிப்பாடாக தேவரையாளி இந்துக்கல்லூரியின் தலைமைத்துவப் பொறுப்பில் பதவியுயர்த்தப்பட்டார். இவரது ஆளுமை, அறிவு என்பவற்றின் வெளிப்பாடாக திரு.குட்டித்தம்பி அவர்களின் சேவைக் காலப் பகுதியில் க.பொ.த (உ.த) பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஒவ்வொரு வருடமும் 5-8வரையான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமை மட்டு மல்லாமல், இப் பாடசாலையின் கட்டடங்கள்,நூலக அபிவி ருத்தி,உபகரணங்கள் போன்ற பௌதீக வளங்கள் அதிகரித்துள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பாடசாலையின் வளர்ச்சிக்கும்,பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் பல வழிகளிலும் உறுதுணையாக நின்று சேவையாற்றிய திரு.குட்டித்தம்பி அவர்கள் சுகவாழ்வுடன் வாழ்ந்து,அவரது அறிவு,ஆற்றல் எமது கல்விச் சமூகத்திற்கு தொடர்ந்தும் சென்றடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கே.கணேஷ்,**
*அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலர்*

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராக நீண்டகாலம் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு.ம.குட்டித்தம்பி அவர்களின் சேவையினைப் பாராட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தனது சேவைக்காலத்தில் நல் ஆசிரியனாகவும், அர்ப்பணிப்புமிக்க அதிபராகவும் கடமையாற்றி பல நூற்றுக்கணக்கான நல்மாணாக்கரை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக இருந்தமையினை நினைவு கூருதல் பொருத்தமானதாகும். இக் கல்லூரி கல்வியிலும், இணைந்த பாட செயற்பாடுகளிலும் உயர்வடைவதற்கு இவரது விடாமுயற்சியும், கடின உழைப்பும் காரணமாக இருந்துள்ளது.

இக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெற்றோர்கள், ஆசிரியர்கள்,அதிகாரிகள் மற்றும் கல்விச் சமூகத்தின் நிறைவான பங்களிப்பினைப் பெற்று இக்கல்லூரியினை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கல்லூரி மாணவர்களில் பலர் பல்கலைக்கழக கல்வியினை பெற்றுக்கொள்வதற்குரிய கல்வி வாய்ப்பினை வழங்கியதுடன், மாணவர்களை கலைத்துறையில் சிறப்பான முறையிலே பயிற்றுவித்து சிறந்த கலைஞர்களாக உருவாக்கியிருப்பதும், இக்கல்லூரியின் உதைபந்தாட்ட அணியினர் மாவட்ட, மாகாண மட்டங்களில் சாதனைகள் புரிவதற்கு காரணமாக இருந்தமையும் இக்கல்லூரி வரலாற்றிலே என்றும் நிலையாகப் பதிவு செய்யப்பட வேண்டியவையாகும்.

இவர் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் பல சமூகப்பணிகளை ஆற்றுதற்கு எல்லாம்வல்ல இறைவனை வேண்டிநிற்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சி.சத்தியசீலன்,**
*பிரதேச செயலாளர், வடமராட்சி தெற்கு, மேற்கு.*

### அற்புத நாயகனை வாழ்த்துகின்றேன்

1972 இல் எழுதுநர் சேவையில் இணைந்து பின் 1974 இல் ஆசிரியர் சேவையில் இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் தனது மகத்தான பணியை ஆற்றி இன்று விடைபெற்றுச் செல்லும் திரு ம.குட்டித்தம்பி அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் நிகழ்வில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெரும் உவகையடைகின்றேன்.

இவர் 1974 இல் ஆசிரியர் சேவையில் இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை உருவாக்கியதுடன் தான் கல்வி கற்பித்த பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கு காரணகர்த்தாவாகவும் விளங்கியவர். இவர் ஓய்வு பெற்றுச் செல்வது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். எனினும் இவரது வயது, சேவைக்காலம் என்பவற்றைப் பார்க்கும் போது இவர் போற்றுவதற்கும், பாராட்டுவதற்கும் உரியவராவார்.

இவர் ஓய்வுபெற்றுச் சென்றாலும் தனது சேவையினை தொடர்ந்து செய்யவேண்டும், இன்னும் பற்பல கல்விமான்களை, சாதனையாளர்களை உருவாக்கவேண்டும் என எல்லாம்வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரித்தாயை வேண்டி பிரார்த்தித்து எனது நல்லாசிகளை கூறுகின்றேன்.

*சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு" "பிரதிஷ்டாலங் சித்தாந்த ஸாகரம்" "பிரதிஷ்டா சிரோமணி"*
**சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்,**
*(சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம், பிரதமகுரு, வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)*

### சிறந்த நிர்வாகியான அதிபர்

அதிபர் திரு.ம.குட்டித்தம்பி அவர்கள் 1995ஆம் ஆண்டு முதல் சிறந்த சேவையாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக 02 வருடம் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிறந்த நிர்வாகியாக இருக்கும் அதிபரினாலேயே மாணவர்கள் சிறந்த கல்விப் பெறு பேற்றினை பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு அதிபர் அவர்கள் ஒரு சான்றாக சா.த., உ.த. பரீட்சைகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டில் கலைத்துறையில் 3A பெறுபேறுகள் பெற்றதுடன், 10 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதியாகியுள்ளமை இக் கல்லூரியின் ஒரு பரிமாண வளர்ச்சியாகும்.

இவரது சேவையைப் பாராட்டுமுகமாக, இவரது ஓய்வின்போது தேவரையாளி இந்துமலர் வெளிவந்திருந்தால் மிகவும் பொருத்தப்பாடுடையதாக அமைந்திருக்கும். எவ்வாறாயினும் அதிபர் திரு. ம.குட்டித்தம்பி அவர்களின் சிறந்த சேவையை மறக்கவும்,மறுக்கவும் முடியாது. ஓய்வின் பின்னரும் பொருத்தமான கல்விச்சேவையில் ஈடுபடவும், நலத்துடன் வாழவும் இறைவன் அருள் புரிவாராக!

**ந.ஆதவன,**
*செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*

**அகமகிழ்ந்து வாழ்த்துவோர்:**
**யா/தேவரையாளி இந்துக் கல்லூரிச் சமூகத்தினர்**



பெயர்: திரு.மயிலு குட்டித்தம்பி
சேவை: இலங்கை அதிபர் சேவை
ஆரம்ப,உயர்நிலைக்கல்வி:யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
இடைநிலைக்கல்வி:-யா/இமையாணன் அ.த.க.வித்தி
முதல் நியமனத் திகதி:-16.09.1974
தகுதி :- B.A Dip.in.Edu

**ஆசிரியர் சேவை**
நு/ஹற்றன் ஹைலன்ஸ் ம.வி
நு/ஹற்றன் சென்.ஜோன் பொஸ்கோ
நு/தலவாக்கலை தமிழ் ம.வி
யா/சிதம்பராக் கல்லூரி

**அதிபர் சேவை**
யா/இமையாணன் அ.த.க வித்தி.
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மலையகத்தில் ஆசிரியராக பணியைத் தொடக்கி யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியில் முதல்வராகி பணியை நிறைவு செய்யும் திரு.ம.குட்டித்தம்பி அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. ம.குட்டித்தம்பி வடமராட்சி வலயத்தில் யா/ சிதம்பரக் கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராகவும், பிரதியதிபராகவும் கடமையாற்றி அக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவியுள்ளார். இவரிடம் இருந்த திறமையை இனங்கண்டே இமையாணன் அ.த.க பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். இமையாணன் அ.த.க பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய காலம் அப்பள்ளிக்கூடத்தின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. இதன் பின்னர் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராக இவர் பதவியுயர்வு பெற்றார். யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் பின்னடைவான நிலையிலிருந்த மாண வர்களின் கல்வியை மேம்படுத்த, சிறந்த பெறுபேறுகளைப் பெற இவர் உதவியுள்ளார். இப்பாடசாலையின் இணைபாட விதானச் செயற்பாடுகளை வெளிக் கொணர்வதிலும் இவர் அயராது பாடுபட்டார். சேவையின் சிகரமாக விளங்கும் திரு. ம.குட்டித்தம்பியின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய வாழ்த் துகிறேன்.

**திரு.வ.செல்வராஜா,**
*வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்.*

### தன்னலம் கருதாத சேவையாளன்

எமது அதிபர் அவர்கள் 1995 ஆம் ஆண்டு எமது கல்லூரியில் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அன்று முதல் எமது கல்லூரியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தன. .சகல துறைகளிலும் எமது பாடசாலை பிரகாசிக்கத் தொடங்கியது. எமது மாணவர்கள் சா.த பரீட்சையில் 10A உம் உ.த பரீட்சையில் 3A உம் எடுக்கும் அளவிற்கு எமது கல்லூரியின் தரத்தை உயர்த்தியுள்ளார்.

விளையாட்டுத்துறையில் எமது உதைபந்தாட்ட அணி பல தடவைகள் யாழ். மாவட்ட சம்பியன் ஆகும் அளவிற்கு எமது விளையாட்டுத் தரத்தை உயர்த்திய ஒரு பெருந்தகை எமது அதிபர். அதுமாத்திரமல்லாமல் எமது கல்லூரியின் பௌதீகவளங்கள் பெருமளவு அதிகரிப்பதற்கும் காரணமாக இருந்தவர்.

எமது அதிபர் அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து எமது சமூகத்திற்குக் கல்விப்பணி புரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்

**திரு.மு.வன்னியசிங்கம்,**
*பிரதிஅதிபர்.*

### மகத்தான அதிபர்

தேவரையாளிச் சமூகத்தின்,கல்வி,கலை, விளையாட்டு,ஆன்மீகம்,அறிவியல்,சமூக மாற்றங்களுக்கு விடிவெள்ளியாக திகழ்ந்த கல்லூரி. இக் கல்லூரியின் உதயம் கல்வி மாற்றத்திற்கு மட்டும் உருவானதல்ல. சமூக மாற்றத்திற்காகவும் உருவாக்கப்பட்டது. காலத்திற்கு காலம் இருந்த அதிபர்கள் இந்த தாற்பரியத்தை உணர்ந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்தப் பாதையில் சற்றும் நெறிபிறழாது கல்லூரியை இயக்கியவர் மணிவிழாக் காணும் நாயகன் உயர்திரு ம.குட்டித்தம்பி அவர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை மூன்றுடன் மனிதநேயத்திற்கும் மதிப்பளித்ததை பல சந்தர்ப்பங்கள் பறைசாற்றும். கடமையில் கண்டிப்பாக இருந்தாலும் மாணவர் நலனிலும் ஆசிரிய நலனிலும் அவர் காட்டிய ஆர்வம் பாராட்டுக்குரியது. கடந்த 10 ஆண்டுகளில் அவரது அறுவடை என்றுமில்லாதது.

அதிபர் என தேவரையாளி சமூகத்தினால் பொறிக்கப்பட்ட அமரர் க.மூ.சி. சீனித்தம்பி அவர்களுக்கு பின் இச்சமூகத்திற்கு கீர்த்தியை ஏற்படுத்திய அதிபர் உயர்திரு. ம.குட்டித்தம்பியே என மனமகிழ்வுறுகின்றது பழைய மாணவர் சங்கம்.

**தி.வரதராசன்,** *செயலாளர், பழைய மாணவர் சங்கம்*

### மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. ம.குட்டித்தம்பி அவர்கள் ஓய்வு பெறுவதை முன்னிட்டு கல்லூரியோடு தொடர்புபட்ட கழகங்கள் இணைந்து இன்று சேவைநயப்பு விழா ஒன்றினை நடத்துகின்றன என்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டபின் இப்பாடசாலை தொடர்பான பிரச்சினைகள் எதுவும் மேனிலை அலுவலகங்களுக்கு வந்ததில்லை. இக்கல்லூரியை ஒரு சமூக நிறுவனமாகவும் கலைக்கூடமாகவும் மாற்றி அமைத்துள்ள பெருமை இவரைச் சார்ந்ததாகும்.

பாடசாலை வளங்களை பயனுறு நோக்கில் செம்மையாகவும் பொருத்தமுறவும் வினைத்திறனுடன் பயன்படுத்தியமையோடு ஆசிரிய ஆளணியினரின் ஒத்துழைப்பை பெற்றமையும் பாடசாலையின் தனித்துவமான உயரிய வளர்ச்சிக்குக் காரணமாகும்.

இவர் அதிபராகக் கடமையேற்ற பின்பு க.பொ.த(சா.த.) இல் எல்லாப் பாடங்களிலும் அதிவிசேட சித்திப் பெறுபேறு பெற்றமை மட்டுமன்றி அப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் வருடாவருடம் 40 வீதத்திற்கு மேலானோர் க.பொ.த.(உ.த.) இல் கல்வி பயில தகுதி பெற்றுள்ளனர். அதுமட்டுமன்றி க.பொ.த(உ.த.) இல் 3A எடுத்தும் வந்துள்ளனர். வருடாவருடம் குறிப்பிட்டதொகை மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லுகின்ற சூழலையும் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனம்நிறைந்த அதிபராகிய திரு.ம.குட்டித்தம்பி அவர்கள் சகல செல்வங்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் நிறைவான வாழ்வு வாழ இறைவனை வாழ்த்தி நிற்பதோடு, இவரது கல்விப்பணிகள் சமூகத்திற்கு மேலும் கிடைக்க வேண்டுமென அவாவி நிற்கின்றேன்.

**திரு.வீ.இராசையா**
*மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்*

### உயர் ஆளுமையுள்ள அதிபர்

கல்வி மேம்பாட்டில் கீழ்நோக்கி நின்ற ஒரு பாடசாலைக்குப் புத்துயிரளித்து அக்கல்லூரியை பாடவிதான, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முன்னுக்குக் கொண்டு வந்த பெருமையுடைய அதிபராகத் திரு.ம.குட்டித்தம்பியே முதன்மையானவராகத் தோற்றமளிக்கின்றார். இவர் தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபராக இருந்தகாலத்தில் எப்போதுமில்லாதவாறு ஒரு குறிப்பிட்ட வருடத்தில் 12 மாணவர்களைப் பல்கலைக்கழகக் கல்வியை காண வைத்தவர். அர்ப்பணிப்பான சேவையுடன் கடமையாற்றும் அதிபர் திரு.ம.குட்டித்தம்பி பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி. இவரின் பட்டப்படிப்பில் கணிதத்தையும் ஒரு பாடமா கக்கொண்டமையால் மாணவரின் கல்விக் கண்காணிப்பில் சிறப்பாகக் கடமையாற்றக் கூடியவராக இருந்தது. இவர் தமது 60 ஆவது அக்வைபில் ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் கல்விக்குச் சேவையாற்ற எனது வாழ்த்துக்களும் சுகதேகியாக வாழ எனது பிரார்த்தனைகளும்.

**வே.தி.செல்வரத்தினம**
மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாண மாவட்டம்.

### பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ம. குட்டித்தம்பி அவர்கள் 60 ஆண்டுகளை நிறைவுசெய்து தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அதிபராக அவர் இருந்த காலம் கல்லூரியின் வளர்ச்சியில் உன்னத காலமாக சிறப்பைப் பெறுகின்றது. கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டுத்துறையிலும் குறிப்பாக உதைபந்தாட்ட வளர்ச்சியில் இக்காலம் சிறப்பைப் பெற்று விளங்குகிறது. அத்துடன் அதன் ஸ்தாபகர் கண்ட கனவுகளுக்கு ஏற்ப இந்துமத அடையாளச் சின்னங்களைப் பேணிக் காத்து வளர்ந்து வருதலும் அதன் சிறப்பாகும்.

நண்பர் குட்டித்தம்பி அவர்கள் எங்களுடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர். அமைதியான சுபாவமும் மென்மையான பேச்சும் கொண்டவர். எங்களுடன் நெருங்கிப் பழகும் ஒருவராக திகழ்ந்தவர். அவர் துணைவியாரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவியாக கற்று உயர்வடைந்தவர். இடம்பெயர்ந்து கரவெட்டியில் வசித்தபோது எங்களுடைய சுக துக்கங்களில் பங்குகொண்டவர்.

திரு.குட்டித்தம்பியின் ஓய்வுகாலம் அமைதியுடனும் மகிழ்வுடனும் அமைய வும் வாழ்க்கை மேலும் உன்னதம் பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன.

**பேராசிரியர் ச.சத்தியசீலன்.**
*பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம*

### சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்திய அதிபா

அகவை 60 நிறைவுசெய்து ஓய்வு பெறுகின்ற திரு.ம.குட்டித்தம்பி அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 1969ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்த காலம் முதல் இன்றுவரை எனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்திலேயே முற்போக்கு சிந்தனையும் சுறுசுறுப்பான செயற்பாடும் இவரிடம் காணப்பட்டது. மலையகத்தில் பணியாற்றிய காலத்தில் மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்ட செயற்திறன்மிக்க ஆசிரியராக விளங்கியதை நானறிவேன். வடமராட்சிக்கு இடமாற்றம் பெற்று வந்து ஆசிரியராக அதிபராக பணியாற்றி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி இருக்கிறார். யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, யா/இமையாணன் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளை குடாநாட்டில் யாவருமறிந்த பாடசாலையாக ஆக்கி வைத்த பெருமை குட்டித்தம்பியை சார்ந்தது.

இரு பாடசாலைகளிலும் அதிபராகக் கடமையாற்றிய 23 வருட காலப்பகுதியில் கல்விச் சிறப்புடன் கூடிய விளையாட்டு வீரர்களை உருவாக்கி இப் பிரதேச மக்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய வழிகாட்டிய நண்பர் குட்டித்தம்பியின் சேவை பாராட்டுக்குரியது.

**திரு.க.அம்பலவாணர்,**
*கோட்டக்கல்விப் பணிப்பாளர்*


### கூடி நின்று வாழ்த்துகின்றோம்

தேவரையாளி இந்து தன்னை
திறமையாய் வழிநடத்தி
யாவரும் போற்றும் வண்ணம்
கல்வியில் வளர்ச்சி காண வைத்து
நேசமாய் தன் உழைப்பை
நின்று வழங்கி வைத்த எம்
அதிபராம் குட்டித்தம்பியின்
சேவையைப் பாராட்டி மகிழ்கிறோம்.
தம்பிக்குப் பின் தம்பியாக
குட்டித்தம்பியின் அதிபர் சேவை
நம்பிக்கை ஒளியாய் திகழ்ந்து
நம்மவர் கல்வி உயர நாளும்
கடமை வீரனாகக் கடமை புரிந்த
குட்டித்தம்பி அதிபர் சேவையினை
கூடி நாம் வாழ்த்துகின்றோம்

**திரு.D.M.வேதாபரணம்**
செயலாளர், Y.M.C.A பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை நிகரையம்பதி சாமுண்டாதேவி சமேத
# அருள்மிகு நிகரை ஞான வைரவர் ஆலய
## அலங்காரப் பூர்த்தித் திருவிழா-09.03.2009 (திங்கட்கிழமை)



### தலைவரின் ஆசிச்செய்தி

சங்கையம்பதியின் காவல் தெய்வம் வைரவர் குடியிருக்கும் சங்கானையின் மத்தியில் குடிகொண்டு அருள்பாலிக்கும் நிகரை வைரவர் பெருமானின் அருளாட்சி தனித்துவமானது.

இலங்கையில் போர்த்துக்கேசர் காலணித்துவ ஆட்சி நடத்திய பின்னர், ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலத்தில் சைவர்கள் வெளிப்படையாகத் தம்வழிபாடுகள் நடத்துவதற்கு எதிரான பல தடைகள், தண்டனைகள் இம்சைப்படுத்திய காலம். இவ்விதமான மத பேராதிக்கம் கொண்டு செயற்பட்ட காலத்தில் எம்மூதாதையர்கள் நிகரை வைரவருக்கு சிறுகோயில் அமைத்து வழிபட்டு வந்தனர். பின்னர் 1932 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்று படிப்படியாக ஆலமரம்போல் வளர்ச்சியடைந்து இன்று பூரணத்துவம் அடைந்த கோயிலாக, கண்கொள்ளாக் காட்சியாக எம் பெருமான் மக்களுக்கு அருள்பாலிக்கின்றார். இன்று வருடாந்த உற்சவம் மாசி மகத் திங்களன்று அலங்கார உற்சவத்தில் இச்சிறப்பு மலரை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு எம்மக்கள் அமைதியும், சமாதானமும் பெற்று, எம்பெருமானின் அருள்பெற்றுச் சீரும் சிறப்பும் பேறும் பெற்று மக்கள் அனைவரும் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

தலைவர் ஆசைப்பிள்ளை சுந்தரமூர்த்தி
பரிபாலனசபை, நிகரை வைரவர், சங்கானை.

### சங்கானை நிகரையம்பதி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஞான வைரவப் பெருமான் ஆலயம் மாசிமக அலங்கார உற்சவ பூர்த்தி விழா

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கா புரியின் வடபால் யாழ்ப்பாணத்தின் மேற்றிசையில் அமைந்த சங்கானையின் மத்தியில் அமைந்திருக்கும் புகழ்பெற்ற ஸ்தலங்களிலும் இலங்கையின் இரண்டாவது பெரிய வைரவர் ஆலயமாகத் திகழும் நிகரையம்பதியில் உறையும் சாமுண்டாதேவி சமேத ஞானவைரவப் பெருமான் ஆலயம். ஈழத் தமிழர்களின் காவல் தெய்வம் வைரவர். வீட்டின் பாதுபாப்பிற்கு நாய் எதற்கு. அதனை வாகனமாகக் கொண்டு இருக்கும் நிகரை வைரவப் பெருமான் குடியமர்ந்திருக்கும் சங்கையம்பதியில் (சங்கானை) இருக்கும்போது மக்கள் நம்பிக்கையோடு வழிபட்டு வருகிறார்கள்.

நிகரை வைரவர் அருளாட்சி தனித்துவமானது. இலங்கையில் போத்துக்கீசர் கைப்பற்றிக் காலணித்துவ ஆட்சி நடத்திய பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலம் சைவ மக்கள் வெளிப்படையாகத் தம் வழிபாடுகளை நடாத்துவதற்கு எதிராகப் பல தண்டனைகள், தடைகள் வழங்கி இம்சைப்படுத்திய காலம். இவ்விதமான மத ஆதிக்கம் மேலோங்கிச் செயற்பட்ட காலத்தில் பல சைவக்கோவில்கள் இடிக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டன. இவ்வேளையில்கூட எமது மூதாதையர் எமது தெய்வத்தைக் கட்டிக்காத்து ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிகரை வைரவருக்குக் கொட்டகை அமைத்து வழிபட்டு வந்தார்கள்.

எமது மூதாதையர்களால் ஆரம்பிக்கப்பட்டு, எவ்வளவு கஸ்ரத்தின் மத்தியிலும், சைவ மக்கள் வழிபடமுடியாத நிலையிலும், வேறு சமயங்கள் வழிபாடுகளை உட்புகுத்திய போதும், நிகரை வைரவர் ஆலயச் சுற்றாடலில் உள்ள மூதாதையர்கள் மனவுறுதியோடு நிகரையம்பதியில் வழிபட்டுவந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிகரையம்பதி சங்கானை வாழ் மக்கள் மனவுறுதியோடு கோவிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 1932 ஆம் ஆண்டு மணிக்கோபுரத்தை அமைத்து, அத்தோடு 09.02.1932 ஆம் ஆண்டு முதலாவது மகா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி, தொடர்ந்து வழிபட்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆலயம் பெரிய அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு, 09.02.1987 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து மணிமண்டபமும் மஞ்சரதம் அமைத்து ஆலயம் பூரணத்துவமான அபிவிருத்தியில் விறுநடைபோட்டு, 29.01.2001 இல் மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றி தொடர்ந்து வருடாவருடம் அலங்காரத் திருவிழா பதினொருதினங்கள் நடைபெற்று வருகின்றது. மாசி மகத்தன்று பூர்த்திவிழா நடைபெற்று வருகின்றது. பத்தாம் நாள் மஞ்சரதத்தில் வைரவப்பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். இவ்வருடம் 09.03.2009 திங்கட்கிழமை வரும் மாசி மகத்தன்று எம்பெருமானின் பூர்த்திவிழாவும் சங்காபிஷேகமும் இனிதுநிறைவேறி ஞானவைரவப் பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

ஆலய பரிபாலன சபையினர்.

### பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை



சங்கானை நிகரை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவ பூர்த்தி தினமாகிய மாசி மகமும் திங்கட்கிழமையும் கூடிய சுப தினத்தில் எம் பெருமானுக்கு அஸ்டோத்திர சத (108) சங்காபிஷேகமும் விசேட பூஜையும் நிகழ்ந்து மாலை பஞ்சமுகார்ச்சனையும் திருவூஞ்சலும் நடைபெற ஞான வைரவர் பெருமான் நல்லருள் பாலித்துள்ளார். எனவே, இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபடும் சகல அடியவர்களுக்கும் வைரவப்பெருமானின் நல்லருள் கிடைக்கவேண்டி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவி அமைதி ஏற்படவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

உற்சவகுரு , கலாநிதி சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார், சங்கானை.

### ஆசிச் செய்தி



காவல் காத்தருளும் கருணைத் தெய்வமான வைரவப் பெருமானைப் போற்றும் பாரம்பரியம் எம் வழிபாட்டில் முதன்மையானது. சங்கானை நிகரை வைரவர் பிரசித்திபெற்ற வைரவர் ஆலயங்களில் சிறப்புக்குரியது. மாசிமகத் திருநாளை முன்விட்டு ஆண்டுதோறும் பெருவிழா நடைபெறுவது தனித்துவமானது. அழகான திருமஞ்சத்தில் வைரவப் பெருமான் எழுந்தருளிவரும் காட்சியைக் காணப் பல்நூறு பக்தர்கள் இங்கு கூடுவர். சுவர்ண ஆபரணங்களால் பெருமானை அலங்காரம் செய்து, அன்னக்குவியலை அர்ப்பணம் செய்து வழிபாடு செய்யும் அழகு, நிகரை வைரவர் சந்நிதானத்தின் பாரம்பரிய அம்சம் எனலாம். மிக அழகான மண்டபங்கள் அமைக்கப்பட்டு உட்பிரகாரத் திருப்பணிகள் நிறைவுபெற்ற நிலையில் இத் திருக்கோவில் சிறப்புற்றுக் காட்சி அளிக்கிறது. இத்திருக்கோயிலை மேம்படுத்துவதில் அல்லும் பகலும் உழைக்கும் மீளா அடியவர்கள் வாழ்த்துக்குரியவர்கள். மகத்துவம் நிறைந்த நிகரை வைரவப் பெருமானின் திருவருளால் எம் மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலைத்திட வேண்டுவதோடு அல்லற்படும் எம் மக்களை ஆறுதல் பெற, அனைவரும் பிரார்த்திப்போமாக.

- ஆறு திருமுருகன்.

## அலங்காரத் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

ஆசைப்பிள்ளை அன்சன்ஸ்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
பிரான்பற்று வீதி, சங்கானை.

கணனி வகுப்பு
NEW MICRO COMPUTER SYSTEMS
MAIN STREET, CHANKANAI.
T.P:0214590042/0602210727
NEW MICRO COMPUTER SYSTEMS
COMPUTER EDUCATION

உதயன்
கட்டப்பொருள் விற்பனை நிலையம்
அனைத்து வகையான ஹாட்வெயர் பொருள்கள் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
59, பிரதான வீதி, சங்கானை.

T.தனேந்திரன்
T.V.டெக் திருத்துனரும் தொழில்நுட்பத்துடன் கூடிய திருத்தவேலைகள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.
நிகரை வைரவர் வீதி, சங்கானை.

கொம்பியூட்டர் வேள்ட்
Local: 021 459 1761/021 459 1890
I.D.D: 0094 21 459 1761, 0094 21 459 1890
Fax: 021 459 1761
E.mail :computerworld@wow.lk
காரைநகர் வீதி, 7 ஆம் கட்டை, சங்கானை.

Flash - Net
நிகரை வைரவர் வீதி, சங்கானை.
இன்ரநெற், உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புக்கள், கணனி விளையாட்டுக்கள் இணையத்தளங்களைப் பார்வையிடல், CD & DVD & MP3 பதிவுகள், பக்ஸ் சேவைகள், பிறிண்டிங் (ஸ்கிறீன், ஓவ் (F) செற், CD & DVD & MP3 விற்பனை, கணனிகள் பழுதுபார்த்தல் இவை அனைத்தும் ஓர் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P.: 0214591634.

சீனியர்
இரும்பு தொழிலகம்
பிரான்பற்று வீதி, சங்கானை.

நேசம் அழகு நகை
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த் தவணையில் உத்தரவாத்துடன் செய்துகொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.

22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
பத்மராஜா அன்சன்ஸ்
நகைத் தொழிலகம்
பிரதான வீதி, சங்கானை.
T.P.: 0776002584, 0776687022.

AIRCOM travels & tours
P.R. Shanthan
Proprietor
Mobile: 0777-310414
2A, Ratnam Road, Colombo - 13.
Tel : 4617109, 4616819.
Fax : 0094-11-2399600, 011-4616819
E-mail : aircom46@hotmail.com
COM

மெடிலாண்ட்
ஆங்கில மருந்துகள் விற்பனையில் பலவருட அனுபவம் உள்ள நிறுவனம்.
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
பிரதான வீதி, சங்கானை.

நேசன் தொழிலகம்
உருக்கு தளபாடங்கள், கேற் கிறில் வகைகள் உட்பட அலுமினியம் பிற்றிங் வேலை, பெயர் பலகைகள், விளம்பர பலகைகள் (பிளாஸ்ரிக்) வகைகளில் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.
CD, VDO கசெற் புதிய பழைய படங்கள் வாடகைக்கு விடப்படும்.
நிகரை வீதி, சங்கானை.

MOTHER AND BABY CARE
R.Shanthan
(Proprietor)
Where your child's dreams come true !
Importers & Retail Dealers of all kinds of Toys and Baby Items, Gift Items & Fancy Items
No. 108/1, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
Mobile : 0777 310414

நவீன அழகிய தங்க நகைகளுக்கு பிரசித்தி பெற்ற ஸ்தாபனம், 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
மணி ஜுவெல்லர்ஸ்
கச்சாய்வீதி, சாவகச்சேரி.
பிரதான வீதி, சங்கானை.

பிரம்யா ஜுவெலர்ஸ்
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

அனுசரணையாளர்: அலங்காரத் திருவிழா பூர்த்தி விழா இளைஞர் மன்றம், நிகரை வைரவர், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டிப்பதி ஸ்ரீ காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் 09.03.2009 திங்கட்கிழமை

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

யாழ்.வண்ணை கன்னாதிட்டி ஸ்ரீகாளி அம்பாள் கோயிலில் இன்று தேர்த்திருவிழா. கருணைமிகு காளித் தாய் கற்பகவல்லியாகக் கனகாம்பிகையாகக் காட்சி தரும் கவின்மிகு காட்சி இன்று கன்னாதிட்டியில் காண லாம்.

திருத்தேரிலே திருவீதி வலம் வந்து அடியார்களுக் கும் அம்பிகையாக, அநியாயங்களையும், அக்கிரமங் களையும் அழித் தொழிக்கும் அருட்தாயாக இன்று ஆரோகணிக்கின்றாள் அன்னை.

துன்ப சாகரத்தினின்றும் மீண்டு இன்ப வாழ்வு நல்க வேண்டும் என்று லோகமாதாவாகிய ஆதிபரா சக்தியான காளி அம்பாளை வேண்டி நல்லைக் குரு மணியின் பாதம் பணிந்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றோம். நாட்டில் அனைவரும் சுபிட்சமும், அமைதியும், சாந்தமும், மகிழ்ச்சியும் நிலவி மங்களகரமாய் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## இன்று காளியம்பாளுக்குத் தேர்த் திருவிழா

வந்தி தாங்கிரி யுகே தேவி
சர்வ சௌபாக்கிய தாயினி
ரூபம் தேஹி ஜெயம் தேஹி
யஸோ தேஹி த்துவியோ யஹி

வணங்கப்பட்ட திருவடிகளையுடைய
சர்வ மங்களங்களையும் தருகின்ற தேவியே!
அழகையும் வெற்றியையும்
புகழையும் தந்து எதிரிகளை நாசம் செய்வாயாக.

திருவண்ணை கன்னாதிட்டி ஷேத்திரத்தில் அடியவர்களுக்கு நல்லான் பொய்கைக் கரையில் கோவில் கொண்டெழுந்தளியிருக்கும் லோகமாதா, காமாட்சி, விஸ்வேஸ்வரி என நரமங்கொண்ட காளிஹா பரமேஸ்வரி அம்பாள், வேண்டும் அடியவர்களுக்கு அருள் மழை பொழியத் தேரேறிப் பவனி வரும் இந்நன்னாளில் அம்பாள், மக்களுக்கு சகல நலன்க ளுடன் அமைதியும், சாந்தி சமாதானமும் நிறைவாகப் பெற்று இன்பமாய் வாழ அருள் வேண்டி ஆசி கூறுகின்றோம்.

''லோகா சமஸ்தா சுஹினோ பவந்து''

சி.ஜோதீந்திரக் குருக்கள்.

## கன்னாதிட்டி வளர் காளித்தாயே! தேரேறி வந்து போரோயச் செய்யம்மா!!

சிவபூமியாம் யாழ்ப்பாணத்திலே வண்ணை கன்னா திட்டிப் பதியின் கண்ணே தம்மை வழிபடும் அடியார்க ளின் துயர் போக்கும் பொருட்டு எழுந்தருளி வீற்றிருக் கின்றாள். அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியான எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீகாளி அம்பாள். அவளின் எல்லையில்லா அருட்பிரவாகத்திலே மூழ்கித் திளைக்க அவள் அருள் வேண்டும். அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

அந்தக் கன்னாதிட்டி வளர் காளி அம்பாளுக்கு இன்று தேர்த்திருவிழா. விஸ்வப் பிரம்ம மக்களின் குலதெய்வ மான காளி அம்பிகை இன்று சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வரும் அருட்காட்சி கண்கொள்ளாக் காட்சி. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவி சர்வாலங்கார பூஜிதையாக, சர்வலோக நாயகியாக, அண்டசராசங்களின் அன்னையாக இன்று ரத பவனி வருவது காணக் கண் கோடி வேண்டும்.

ஈழத்துச் சித்தர் கடையிற் சுவாமிகளால் தினமும் அன்போடு வழிபாடு செய்யப்பட்ட வெள்ளைக் கண பதி, ஆலய வாயிலில் விக்கினம் தீர்க்கும் விநாயகராக எழுந்தருளி வீற்றிருக்கும் இந்தப் புதுமைமிக்க ஆலய வீதியில் எமது போராட்டம், எமது துன்பம், துயரம், தொல்லை அனைத்தும் அழித்து ஒழிக்க அம்பிகை யின் தேரோட்டம் நடக்கிறது.

மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். எனவே, நாம்படும் வேதனை, கஷ்டங் கள் யாவும் நீக்க காளிஅம்பாள் ரதத்திலேறி ஆரோ கணிக்கிறாள். முன்னே மங்கள இசை முழங்க, தேவியின் தேர் வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே இடம் பிடிக்க லாம் என்ற நோக்கில் அடியார்கள் தேரிழுக்க, பண்ணிசை பஜனை ஒலிக்க, நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்வ தற்காக அடியவர் கற்பூரச்சட்டி ஏந்திவர, காளி அம்பாளின் கடைக்கண் பார்வை கிடைத்தால் போது மென்று ''அரோ கரா'' கோஷம் எழுப்பிவரும் அடியார் கூட் டம் அலைமோத அம்பாளின் ரதமானது மணி ஒலிக்க ஆடி அசைந்து வரு வது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒன்று.

ஜன சமுத்திரத்தின் நடுவே தங்கத்தோணி வருவது போல் தேர் இவர்ந்து வருகின்றஇன்பக் காட்சி இன்று கன்னா திட்டியில் களைகட்டுகிறது.தனந்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நல் லன எல்லாந்தரும் காளிஅம்பாள் தம்மைக் கைதொழு வாரைக் கைவிட மாட்டாள். ஆகவே, இன்றைய தேர்த்திரு விழா எமது அல்லல் அகன்று அன்பும், ஆனந்தமும் இன்ப மும், மகிழ்ச்சியும் நிறைந்த நல்வாழ்வை எமக்கு நல்கி, நாட்டில் அமைதியும் சுபீட்சமும், சமாதானமும் நிலவ அருள் பாலிக்க வேண்டுமென்று அம்பாளைச் சிந்தித்து, வந்தித் துச், சேவித்துப் போற்றித் துதித்துப் பிரார்த்தித்து நிற்போமாக.

''காளித்தாயே கடைக்கண் பாரம்மா!
கஷ்டங்கள் நீங்கக் கருணை மழை பொழியம்மா!!

சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## பொற்கமல பாதத்தில் நற்கதி நீ தரவேண்டும்

உன் நாமம் உச்சரித்த வண்ணம்
உன்வீதி வலம் வந்தோம்
உலகத்து நாயகியே லலிதா
திரிபுரசுந்தரியே தாயே
கன்னாதிட்டி வளர் காளிகாதேவியே
கற்பகவல்லி நீயே
கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தினோம்
அருள் புரிவாய் அம்மா!
பொன்னார் திருவடியைப்
போற்றித் துதி செய்திட்டோம்
பொற்கமல பாதத்தில்
நற்கதி நீ தரவேண்டும்!
சின்னா பின்னமாய் எம் வாழ்வு
சிதைந்து போய் விடாமல்
சீரோடுஞ் சிறப்போடும்
நாம் வாழச் செய்யம்மா!

-காளிகழல் பணிவோன்.


## விழா சிறப்புற வாழ்த்துவோர்:




**அ.க.நந்தபாலா நகை வாணிபம்**
அசல் 22 காட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
51A, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா நகை மாளிகை**
அசல் 22 காட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கிருஷ்ணா அடைவு கடை, 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**கரன் ஜுவெலர்ஸ்**
அசல் 22 காட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**துர்க்கா நகைப் பூங்கா**
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

**கஜமுகன் ஹாட்வெயர்**
கட்டடப் பொருள்கள், மிறகுஜி சீமெந்து, பெயின்ற் வகைகள், கல் ரேக்ஸ் ஒயில் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
கஜமுகன் ஹாட்வெயர்
இல.147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**லக்சன் வீடியோ**
பழைய, புதிய பாடல்கள் Record பண்ணிக் கொடுக்கப்படும் கொட் வகைகள் நியாயமான விலையில் கொடுக்கப்படும்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**TRACTOR SPARES**
Importers and Dealers In Tractor Spare Parts Specilist in Massy ferguson Engineers.
7, Kannathiddy Road, Jaffna.

**சண்முகம் சைவ உணவகம்,**
கன்னாதிட்டி (சிவன் கோவிலடி), யாழ்ப்பாணம்.

**சந்திரன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு வியாபாரம்
சகல பொருள்களும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**சிறி நதியா நகை மாளிகை**
அசல் 22 காட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இணை நிறுவனம்:
சிறி நதியா நகை மாளிகை

**நியூ நகுலா ஜுவெல்லறி**
அசல் 22 காட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
நியூ லலிதாஸ் ஜுவெல்லறி
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் முகம்.... நிஜத்தின் முகம்....

## "யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்"

### உறைந்தது மௌனம்



பெண்களுக்கெதிரான வன்முறைகள் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிப் பேசப்பட்ட போதும் உண்மையில் பெண்களை மிகுந்த துன்பத்திற்கு உள்ளாக்குவதும், எதிர்காலத்தை இருளடையச் செய்வதும் அவர்கள் மீதான பாலியல் வல்லுறவாகும்.

ஒரு பெண்ணின் மீது பாலியல் வல்லுறவு நடந்திருக்குமாயின், அது தண்டனைக்குரிய குற்றம். எனினும் சம்பந்தப்பட்டவர்களிற்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்குப் பாதிக்கப்பட்டவர்கள் முன் வருவதில்லை. நீதிமன்றத்தில் பாலியல் வல்லுறவை நிரூபிப்பதற்குப் பெண்கள் தயங்குகிறார்கள். சட்டத்தில் இருக்கும் சில நடைமுறைகளைப் பின்பற்ற விருப்பமின்மை, தனது எதிர்காலம், குடும்ப கௌரவம் கருதியும் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு கொள்ளாமல் இருந்து வருகின்றனர். இதனைவிட சட்டம், நீதி மன்றம் என்பன பெண்களுக்குச் சாதகமாக இல்லை என்ற பிரதான காரணத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். மேலும் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்கள் தொடர்பில் தவறான அணுகுமுறையைச் சமுதாயம் கடைப்பிடிப்பதும் ஆதனால் பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்களும் தண்டனை பெற்றுக் கொடுப்பதில் இருந்து பெண்களின் உறுதியைத் தளர்த்தி விடுகின்றது.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண்ணைப்பற்றி மேலும் தவறாகப் பேசி மனக்காயங்களை அதிகரிக்கச் செய்வதில் தான் எம்மவர்களுக்குப் பரிச்சயம் அதிகம். இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தோழமையுடன் உதவி செய்வதும், அந்தப் பெண்ணின் எதிர்காலம் குறித்த அக்கறையுடன் நடந்து கொள்வதும் எம்மவர்களால் முடியுமா? என்பது சந்தேகமே. பாதிக்கப்பட்ட சில பெண்கள் குற்றம் புரிந்த நபருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க விரும்பிய போதும், சமுதாயத்தின் கேலிப் பேச்சுக்கள் அவர்களை முடக்கி விடுகின்றது. சில பெண்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காகப் போராட விரும்பிய போதும் அவர்கள் அது பற்றித் தெளிவு இல்லாதவர்களாக உள்ளனர்.

இப்படியாக காதல் என்னும் பெயரில் அவளின் கற்பையே சூறையாடிய நய வஞ்சகன் ஒருவனின் உண்மைக் கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

அபிநயா உயர்தரம் படித்து பல்கலைக் கழக அனுமதி பெறமுடியாமையினால் கொம்பியூட்டர் கற்கலானாள். அவள் தினமும் சென்று வரும் பஸ்ஸில் அகத்தியன் என் னும் இளைஞன் செல்வது வழக்கம். அகத் தியன் கடை ஒன்றில் வேலை பார்ப்பவன். அவன் தினமும் அபிநயாவை ரொம்பவே கரைச்சல் செய்வான்; தன்னைக் காதலிக்கும்படி. ஆனால் அபிநயாவிற்குக் காதலிப்பதில் ஈடுபாடில்லை.

அகத்தியனின் இடைவிடாத தொந்தரவு காரணமாகவோ என்னவோ அவளும் அகத்தியனைக் காதலிக்க ஆரம்பித்தாள். அம்மா, அப்பாவிற்கு அபிநயா ஒரே ஒரு மகள். அவ்வளவாக வசதியாக இல்லை. என்றாலும் ஓரளவிற்கு வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் அகத்தியன்– நான்கு சகோதரிகளுடன் இவனுமாக–ஐந்து பிள்ளைகளாக அகத்தியனின் அம்மா அப்பாவிற்கு வளர்ந்தார்கள். அகத்தியனோ மிகவும் பணக்கார வீட்டுப் பையன். இருந்தும் தனது நண்பனின் கடையில் நண்பனின் கட்டாயத்திற்காக கணக்காளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தான்.

அபிநயா–அகத்தியன் காதல் புரிந்து ஆறுமாத காலம் நகர்ந்ததும் அகத்தியன் தனது வீட்டினருக்குத் தெரியாமல் அபிநயாவை பதிவுத் திருமணம் புரிந்து, பின்னர் அபிநயா வீட்டில் கிழமையில் மூன்று நாள் தங்கி வந்தான். அபிநயாவின் அம்மாவிடம் தான் அபிநயாவைத் தான் திருமணம் செய்வேன் என உறுதி மொழி வழங்கி அங்கு மூன்று நாள்களும் மீதி நாள்களை அகத்தியன் தனது வீட்டிலும் நகர்த்தி வந்தான். அபிநயாவின் அம்மா, மகளின் திருமணத்தை விமரிசையாகக் கொண்டாட எண்ணி அகத்தியனிடம் கேட்கும்போது அகத்தியன் தனது சுயரூபத்தைக் காட்டினான்.

அம்மா திருமணம் பற்றிக் கேட்டதும் அபிநயா வீட்டிற்கு வருவதையும் குறைத்துக் கொண்டான். சில நாள்கள் ஆனதும் அபிநயாவைப் பார்ப்பதையும், கதைப்பதையும் நிறுத்திக் கொண்டான். ஆனால் அபிநயாவினால் அவனை அப்படியே

**-ரமா-**

விட்டுவிட முடியவில்லை. அவள் தொலைபேசி மூலமும் நேரிலும் தொடர்பு கொண்டாள். ஏனெனில் அவள் அவனை உயிராக நேசித்தவள். அவனோ பொழுது போக்கிற்காகக் காதலித்துத் தன்னை ஏமாற்றி விட்டான் என அழுது புலம்பினாள். இந்தப் பாழாய்ப்போன காதலினால் தனது வாழ்க்கையையும், கற்பையும் இழந்து நடுவில் நிற்பதை எண்ணி அழுது புலம்புகிறாள். ஆனால் அகத்தியனுக்கோ வேறு பெண்ணைப் பார்த்து வீட்டில் நிச்சயம் பண்ணி வைத்திருக்கின்றார்கள். இன்னும் ஓரிரு மாதங்களில் அகத்தியனுக்கும் நிச்சயம் பண்ணிய பெண்ணிற்கும் திருமணம் நடக்கப் போகின்றது. அபிநயா என்ன செய்வாள்?.

அவளின் வயிற்றில் வளர்ந்த கருவையும் ஆசை வார்த்தைகள் கூறி கருக் கலைப்பு செய்து விட்டானே பாதகன். ஆனால் சமூகம் அபிநயாவிற்குக் கொடுத்த பட்டம் ஓடிப் போனவள். அவளின் வாழ்வு விதியின் விளையாட்டு.

**மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.** (சி/557013)


## மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை-030

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம் கொண்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2008-08-05 ஆம் திகதி நடைபெற்ற "அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பிரதேச நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் மக்கள் வங்கிக்குச் சாதகமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.10.03 ஆம் திகதி கொண்ட இல 5552 கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதி கொடுப் பனவில் திரு .கந்தசாமி கனகநாயகமும் சுபோதினி கனகநாயகம் ஆகியோர் தவணை தவறியுள்ளமையினாலும், குறிப்பிட்டுள்ள ஈட்டு முறியின்கீழ் தற்போது ரூபா. இருபத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து நூற்றி எண்பத்து ஒன்றும் சதம் பதினாறும் ரூபா(29,77,181.16) பணத்தொகையை ஈட்டுமுறி இலக்கம் 5552 இன் பிரகாரம், தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டி உள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை அதன் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கி சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் இவ் வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட ஈட்டுமுறி இல 5552 இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனத்தை யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேர வேண்டிய இருபத்து ஒன்பது இலட்சத்து, எழுபத்து ஏழாயிரத்து, நூற்றி எண்பத்து ஒன்றும், சதம் பதினாறும் ரூ.(29, 77,181,16) பணத்தையும் ரூபா.இருபத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து ரூ. (29,50,000,00) க்கு 2005.11.10 ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை 22% வீத வருடாந்த வட்டியுடனும் முழுப் பணத்தையும் விற்பனை திகதி வரை ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை இருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச் சட்ட "29 எல்" பிரகாரம் அறவிடப்படும். ஏனைய வரவுத் தொகைகளும் அறவிடவேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

### ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை. மதப்புலி வளவு என அழைக்கப்படும் ஆதனம் நிலப் பரப்பு 01 குளி 16. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.ஐயாறு 1967 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி அளந்து தயாரித்த 731 ஆம் இலக்க வரை படத்தின் படி பிரிவு ஒன்று என வெளிப்படுத்தப்பட்டு வீடு, பயிர்களுடனும் அங்குள்ள கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப் புரித்தும் குறிப்பிடப்பட்ட நிலப் பரப்பு 01 வ.க குளி 16 இதன் எல்லை கிழக்கு வைத்திலிங்கம் கந்தையாவின் ஆதனம், வடக்கு துரைரத்தினம் பெண் அன்னம்மாவின் ஆதனம், மேற்கு வீதி தெற்கு நாகலிங்கம் பெண் நாகம்மாவினதும், ஏனையோரினதும் ஆதனம்.

இது யாழ்ப்பாண காணிப் பதிவாளர் அலுவலகத்தின் இல டி/582/42 கீழ் 2005.10.04 ஆம் திகதி இவ் விவரங்கள் பதியப்பட்டுள்ளன.

உப பொது முகாமையாளர்
வட.வலயம்.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி
ஒப்பம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எடுத்து யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## யோகானந்தி யோகராசா

**பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் எனது ஆரம்பக் கல்வியை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கற்றுத் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தேன். சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெற்றேன். சட்டத்துறையில் கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகக் கலைத்துறையைத் தேர்ந்தெடுத்தேன். கலைத்துறையில் தமிழ், அளவையியல், அரசியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன்.

எமது பாடசாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கின்றமையால் நாம் பல சிரமங்களை எதிர்நோக்கினாலும் எமது அதிபரின் வழிகாட்டலினாலும், ஆசிரியர்களின் கற்பித்தலினாலும், ஊக்கத்துடன் கற்று இப்பெறுபேற்றை அடைய முடிந்தது. இப்பெறுபேற்றை அடைவதற்கு உதவிய இறைவனுக்கும், ஆரம்பநிலையில் இருந்து கற்பித்த சகல ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். என்னால் இப்பெறுபேற்றை அடைய முடியுமா? என்று தயங்கிய வேளையில் "உன்னால் 3ஏ எடுக்க முடியும், நீ 3ஏ தான் கட்டாயம் எடுக்க வேண்டும்" என்று எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி உந்து சக்தியாக அமைந்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எனது சகோதரிகள் அனைவரும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதும் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது.

இப்பெறுபேற்றை இறைவனின் பாதங்களிலும், என் பள்ளித்தாயின் பாதங்களிலும் எனக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் சமர்ப்பணம் செய்கின்றேன்.



## ஜனனி சிறிகாந்தன்

**பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் எனது ஆரம்பக் கல்வியை காசிநாதர் வித்தியாலயத்தில் கல்வி கற்றுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6இல் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து கொண்டேன். சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தும் எனது பல்கலைக்கழக கனவின் உந்துதலால் கலைப் பிரிவினைத் தெரிவு செய்தேன். கலைப் பிரிவில் நான் பொருளியல், அளவையியல், தமிழ் ஆகிய பாடங்களினைத் தெரிவுசெய்தேன்.

கலைப் பிரிவினைப் பொறுத்த வரையில் பொருளியல் சவாலுக்குரிய ஒன்றாகவே கருதப்பட்டது. எனவே எனது கனவினை நிறைவேற்ற நான் படித்து அதில் வெற்றி கொண்டேன். எனது மாவட்ட நிலையில் ஆறாவது நிலை என்ற முன்னணிப் பெறுபேற்றிற்கு பொருளியலில் சிறந்த பெறுபேறே காரணம் எனலாம். எனது இப்பெறுபேறு நான் எதிர்பார்த்த ஒன்றே. எனினும் மாவட்ட நிலையில் முன்னணிப் பெறுபேறு பெற்றது மகிழ்ச்சியாக உள்ளது.

முதலில் கற்றலுக்கான வளத்தினை ஏற்படுத்தி என்னை இந்நிலைக்கு உயர்த்திய பாடசாலை அன்னைக்கு எனது நன்றிகள். எனது பாடசாலை அதிபரின் அர்ப்பணிப்பான சேவையும், அவர் எமக்குத் தந்த ஊக்கமுமே எனது பெறுபேற்றிற்கு முக்கிய காரணம். மற்றும் எனது உபஅதிபர், வகுப்பாசிரியை, ஆசிரியர்களின் அறிவுரையும் அக்கறையுமே என்னை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது. எனது ஆசிரியர்களின் திறமையும், அனுபவமும் எனக்கு உந்துசக்தியாக அமைந்தன. எனவே பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், பெற்றோர், உறவினர், நண்பர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூறுகின்றேன். மேலும் எனக்கு ஊக்கமளித்து அறிவுரை கூறிய எனது சகோதரருக்கும் எனது நன்றிகள்.

எனது பேராதனைப் பல்கலைக்கழகக் கனவு நிறைவேற உதவிய இறைவனுக்கும் நன்றிகள்.



## யாழினி சண்முகவேல்

**பெறுபேறு: 2ஏபி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் எனது ஆரம்பக் கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றேன். அதன் பின்னர் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கற்றேன்.

எனது தந்தை பிரதேச சபையில் லிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தாய் வீட்டுப்பெண். பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற விருப்பத்தினால் கலைப்பிரிவைத் தெரிவு செய்தேன். எனது குடும்பத்தினரின் வழிகாட்டலின் அடிப்படையில் தமிழ், புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன். நான் புவியியல் பாடத்தைக் கற்கும் போது சிலர் "இது கடினமான பாடம்" என்று கூறியதுண்டு. இருப்பினும் பூமியைப் பற்றி அறிந்து கொள்ளும் விருப்பத்தினாலும் அதற்கு வழிகாட்டக் கூடிய வகையில் வீட்டிலேயே புவியியல் ஆசிரியர் இருந்தமையினாலும் விடா முயற்சியியுடன் புவியியல் பாடத்தைத் தொடர்ந்து கற்றேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் எனது குடும்பத்தினருக்கும் நண்பிகளுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். படிக்கும் காலங்களில் பல இடையூறுகளைச் சந்தித்தேன். ஆயினும் சகோதர, சகோதரியின் வழிகாட்டலினாலும் நண்பியின் உதவியினாலும் நல்லதொரு நிலையை அடைந்துள்ளேன்.

எதிர்காலத்தில் புவியியல் துறையைக் கற்று அதில் சிறந்து விளங்க விரும்புகின்றேன்.



## தனுர்சிகா இராசரத்தினம்

**பெறுபேறு: 2ஏபி (உசன் இராமநாதன் ம.வி.)**

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலே கற்றேன். எனது பாடசாலை அதிபர் சி.மனோகரன் அவர்களும் ஆசிரியர்களும் வழங்கிய ஊக்குவிப்பு இப்பெறுபேற்றிற்கு காரணமாகியது.

சிறு வயதில் இருந்து கலையில் ஆர்வம் கொண்ட நான் உயர் கல்வியிலும் கலைப்பிரிவுப் பாடத்தையே தெரிவு செய்தேன். [தமிழ், வரலாறு, சங்கீதம்]. தற்காலிக இடப்பெயர்வு காரணமாக சிறிதுகாலம் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கற்றேன். இப்பாடசாலை அதிபர் திருமதி ஜெ.சூரியகுமாரி என்னை அனுமதித்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார். இங்கு கற்பித்த ந. சத்தியவேந்தன், க.உமாசுதன், க.சந்திரிக்கா போன்ற ஆசிரியர்களின் வழிகாட்டல் இப்பெறுபேற்றிற்குக் காரணமாக அமைந்தன.

மேலும் தனியார் கல்வி நிலைய தமிழ் ஆசிரியர் க.ஜெசிந்தன் சிறந்த முறையில் கற்பித்து சிறப்பாகத் தயார்ப்படுத்தியமையால் நான் இப்பெறுபேற்றை அடையச் சாதகமாக அமைந்தது. வரலாற்று ஆசிரியரான பத்மன் ஆசிரியர் ஒரு வருடகாலத்தில் கற்பித்து சிறந்த பெறுபேறு அடைய வழியமைத்தார்.

எனது பெற்றோரும் சகோதரர்களும் எனது கல்விக்கு உறுதுணையாக அமைந்தார்கள். நான் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று வேலை செய்யவேண்டும் என்பதே பெற்றோரின் எதிர்பார்ப்பாகும். நான் எதிர்காலத்தில் ஓர் ஆசிரியராகி சமூகத்திற்குச் சிறந்த சேவை [illegible] என்பதே எனது இலட்சியம்.



## வீரகத்திப்பிள்ளை கௌதமன்

**பெறுபேறு: 3ஏ மாவட்டநிலை-1 (சென்.ஜோன்ஸ் கல்லூரி)**

எனக்கு ஆரம்பம் முதலே கலைத்துறை சார்ந்த பாடங்களில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அதனால் எனது சுயவிருப்பின் பேரிலே கலைத்துறையைத் தெரிவுசெய்தேன்.

எனது இப்பெறுபேற்றிற்கு பலர் பக்கபலமாக இருந்தார்கள். எனது பெற்றோர் கற்றலிற்கான சிறந்த சூழலினையும், வசதி, வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்திருந்தார்கள். அதிலும் அம்மாவிற்கு என் மீது எப்பொழுதும் அக்கறை உண்டு. பாடசாலை அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தார்கள். எனது பாடசாலை எனது அறிவுத் தேடலிற்கும் சேமிப்பிற்கும் சிறந்த களமாக அமைந்தது. மேலும் எனது நண்பர்கள், நண்பி, உடன் பிறவாத சகோதரி ஆகியோரும் எனக்கு எப்பொழுதும் ஆதரவாக இருந்தார்கள். அத்துடன், இறைவனின் அருளும் துணையாக இருந்தது எனலாம். எமக்கு உயிரியல், கணிதப் பிரிவு மாணவர்களைப் போன்று அதிகளவிலான பரீட்சைகளை முன்னோடிகளைச் சந்தித்திருக்க வாய்ப்பேற்பட்டிருக்கவில்லை. தொண்டைமானாறு பரீட்சை மட்டுமே பயிற்சியாக இருந்தது. இக்குறைபாடு இனியாவது நிவர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

பரீட்சைக்கு இருமாத காலத்திற்கு முன் வலது கை ஆட்காட்டி விரலில் ஏற்பட்ட காயத்தால் 7 தையல்கள் போடவேண்டி ஏற்பட்டது. இதனால் 3 கிழமைகளாகப் பேனை பிடித்து எழுத முடியாமல் போயிற்று. காயம் குணமான பின்னரும் முன்போல் வேகமாக எழுத முடியவில்லை. இருப்பினும் கடும் பயிற்சிக்கு பின்னரே வேகமாக எழுதமுடிந்தது. இப்படியான பெறுபேறு நான் எதிர்பார்த்ததை விட அதிகம்தான். அளவையியல் பகுதி II எதிர் பார்த்ததைவிட கடினமானதாக இருந்தது. இதனால் நிலையில் பின் தள்ளப்படுவேன் என எதிர்பார்த்தேன். எனினும் புவியியல், அரசறிவியல் ஆகிய பாடங்கள் 'இசற்' புள்ளியை அதிகரிக்கச் செய்திருந்தன. எதிர்காலத்தில் சட்டம் சார்ந்த துறையில் ஈடுபடவே விரும்புகின்றேன். இதுவே எனது நீண்டநாள் கனவாகும்.



## வாஹினி ஞானச்சந்திரன்

**பெறுபேறு: 2ஏபி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் எனது ஆரம்பக் கல்வியைத் தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலையில் கற்றேன். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6தொடக்கம் உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றேன். எனக்கு சிறுவயதிலிருந்தே தமிழ் மீது ஆர்வம் அதிகம். அதனால் உயர்தரத்தில் கலைப்பிரிவினைத் தெரிவு செய்தேன். கலைப்பிரிவில் தமிழ், அளவையியல், புவியியல் ஆகிய துறைகளைக் கற்றேன். என்னைப் புவியியல் கற்குமாறு தூண்டியவர் எனது அம்மாதான்.

அவர் புவியியல் பாடத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறக்கூற எனக்கும் புவியியலைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. எனது பெறுபேற்றிற்கு உறுதுணையாக இருந்த கடவுளுக்கும் எனது பாடசாலை அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் இத் தருணத்தில் நன்றி கூறிக் கொள்கின்றேன். எனது பெற்றோர் படிப்பு விடயத்தில் என்னை சுயமாகச் செயற்பட வைத்தனர். படிப்பதற்குரிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். நான் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறவேண்டும் என்பதில் எனது பெற்றோரும் எனது சகோதரியும் அதிக ஆர்வமாக இருந்தது மட்டுமன்றி அதற்குரிய ஊக்கத்தினையும் அளித்தனர். எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எனது பெற்றோர் என்மீது வைத்திருந்த அக்கறையும் நம்பிக்கையும் என்னை மேலும் மேலும் கற்கத் தூண்டியது.

ஒவ்வொரு நாளும் படிக்கும் முன்பு கடவுளை மனதார வணங்கி விட்டுத்தான் படிக்கச் செல்வேன். எனது எதிர்கால இலட்சியம் சட்டத்தரணியாக வரவேண்டும் என்பதாகும்.

**சந்திப்பும், படங்களும்: ஒளண்யன், கணேசமூர்த்தி, தமிழ்வண்ணன். 32**



## ஜானி கமலநாதன்

**பெறுபேறு: 2ஏபி (மகாஜனக் கல்லூரி)**

நான் தரம் 1முதல் தரம் 13 வரை மகாஜனக் கல்லூரியில் கற்றேன். உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், அரசியல், அளவையியல் ஆகிய பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றேன். எனது இப்பெறுபேற்றிற்கு பாடசாலை ஆசிரியர்களினதும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களினதும் வழிகாட்டலே காரணமாகும்.

உயர்தரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் போது தமிழறிவு வினாவிடை தேசிய மட்டப் போட்டிக்காகக் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. கொழும்புக்குச் சென்று வந்ததன் பின்னர் அதிக கவனமெடுத்துப் படித்தேன். எனது படிப்பிற்கான செலவுகள் அனைத்தையும் என் அண்ணாமார்களே தந்தார்கள். என் வீட்டில் நான் படிப்பதற்கு எந்தவித இடையூறும் இருந்ததில்லை. எனது கல்வியில் என் அம்மா மிகவும் அக்கறையாக இருப்பார். எனது பாடசாலையில் படித்து எனக்கு முன்பு 2007இல் உயர்தரப் பரீட்சை எழுதிய எனது நண்பர்களும் நான் படிக்க வினாத்தாள்கள் தந்து உதவினார்கள். க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றமைக்காக எமது பாட சாலைப் பழைய மாணவர் சங்கம் மாதம் ஒரு தொகைப் பணம் தந்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று ஊக்குவித்தது. நான் இப்பெறுபேற்றைப்பெற உதவி செய்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.



## வி.கு.துசீத்தா

**பெறுபேறு: ஏ2பி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் தரம் 1முதல் தரம் 11 வரை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். தனியார் கல்வி நிறுவனம் எதற்கும் செல்லாது கல்வி கற்று சாதாரணதரப் பரீட்சை எழுதினேன். அதில் 7ஏ2பிசி என்று சிறப்பான பெறுபேற்றை அடைந்தேன். அதன்பின் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கணிதப் பிரிவில் கல்வி கற்றேன். அத்துடன், தனியார் கல்வி நிறுவனத்திலும் கல்வி கற்றேன். எனது வீட்டில் ஐந்து பிள்ளைகளின் படிப்புக்கு ஏற்ற வரவு இல்லாததால் மிகவும் கஷ்டமான நிலையில் கல்வி கற்றேன். ஆனால் எனது இவ்வுயர்வுக்கு அடிப்படைக் கல்வியையும் கல்விக்கான செலவுகளையும் தொண்டைமானாறு வீரகத்தி ம.வி.அதிபரும், ஆசிரியர்களுமே வழங்கிப் பெரிதும் உதவினார்கள்.

எனது கல்வியின் பெரும் பங்கு இவர்களையே சாரும். எனது உயர்தரப் படிப்பைப் பூர்த்தி செய்வதற்கும் மெதடிஸ்தப் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், தனியார் கல்வி நிறுவனமும் முற்று முழுதாக உதவி புரிந்தன. மேலும் நான் சிறிய வயதிலிருந்து பொறியிய லாளராக வேண்டுமென்ற ஆர்வத்துடன் கல்வி கற்றேன். அதற்கான தகுதியையும் இப்போது பெற்றுள்ளேன். எனது கல்விக்கு உதவி புரிந்த அதிபர், ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள்.



## சுமதி சிதம்பரப்பிள்ளை

**பெறுபேறு: 2ஏபி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

நான் ஆரம்பக் கல்வியை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றேன். உயர் கல்வியினை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் சிறப்பாகக் கற்றேன். சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற முடியவில்லை. ஆயினும் உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று எனது பெற்றோர், அதிபர், ஆசிரியர்களைப் பெருமைப் படுத்துவதே எனது இலட்சியமாகக் காணப்பட்டது.

உயர்தரத்தில் கலைப்பிரிவை தேர்ந்தெடுத்து தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைக் கற்றேன். இப்பெறுபேற்றை பெறுவதற்கு எனது தாய், தந்தையின் முயற்சியும் சகோதரர்களின் ஊக்கமும் பெரும் பங்காற்றியது. மேலும் அதிபர், உப [illegible] வழிகாட்டலும் கற்பித்த ஆசிரியர்களின் வழிகாட்டலும் அன்பு நிறைந்த [illegible] பெரும் சக்தியாக இருந்தது. எனது பெறுபேற்றிற்கு தனியார் கல்வி நிறுவனங்களும் எனது நண்பர்களின் கூட்டுறவும் காரணமாக அமைந்தது. எதிர்காலத்தில் ஓர் ஆசிரியராக வரவேண்டும் என்பது எனது இலட்சியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் சாதனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 9

மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றல் சாதனைக்கண்காட்சி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணியள வில் அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வலிகாம வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் சி.மாதவகுமாரன் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ரூபா உத யரட்ணம் சிறப்பு விருந்தினராகவும், மாரீசன் கூடல் பங்குத்தந்தை எம்.எம்.எச்.ஞானேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள் வர். (203-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரியாலை ஐக்கிய கழகத்தின்
முன்னாள் உதைபந்தாட்ட
அணித் தலைவரும்,
தற்போதைய வீரருமான
**C.A.அரவிந்தன்** (B.A)
தேசிய ஹொக்கி அணியில்
இடம்பெற்றமையையிட்டு பெருமை
அடைவதோடு, அவர் மென்மேலும்
பல சாதனைகள் படைக்க வேண்டி
வாழ்த்துகின்றோம்.


நிர்வாகம்,
அரியாலை ஐக்கிய கழகம்.
(83342)


## சிறிய கூட்டுறவு நகர் கட்டட திருத்தம் செய்வதற்கான கேள்விக் கூறு கோரல்

எமது சங்கத்தால் அமைக்கப்படவுள்ள சிறிய கூட்டுறவு நகர்களுக்கான திருத்த வேலைகளுக்கான கேள்விக் கூறுகள் சங்கத்தால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 20.03.2009 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு சங்க தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
வலி.கிழக்கு வடபகுதி,
08.03.2009. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

## இதய அஞ்சலி



சுன்னாகம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்
களஞ்சிய முகாமையாளர் பதவியில்
நீண்ட காலம் சிறப்பான சேவை
நல்கியவரும் உரும்பிராய் கிழக்கை
வசிப்பிடமாகக் கொண்டவருமான


**இராசு. வாமதேவன்**

05.03.2009 அன்று அகால மரண மடைந்த செய்தியை அதிர்ச்சியுடன் செவி யுற்று ஆழ்ந்த கவலையடைந்துள் ளோம். அவரின் பேரிழப்பால் அவதியுறும் குடும் பத்தாருக்கு எமது கண் ணீர் தோய்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்,
பணியாளர்கள்,
சுன்னாகம் பனை தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

*மின்சார நிலையவீதி,*
*சுன்னாகம்.* (சி/557438)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திரு.சின்னத்தம்பி மகேஸ்வரதாசன்
அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா சின்னத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக் கும் அன் னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக சோமாஸ்கந்த னின் பாதார விந்தங்களை பிரார்த்திக்கின் றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் ஏகாம்பரம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தவரும் எழுவை தீவில் வசித்தவரும் தற்போது நயினாதீவில் வசித்தவருமாகிய திருமதி மாணிக்கம் ஏகாம்பரம் 07.03.2009 சனிக்கிழமை நயினாதீவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஏகாம்பரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகநாதன் - காமாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரன் (பிரதேசசபை, வேலணை), காலஞ்சென்றவர்களான மதிவதனி, மதிவேணி மற்றும் மதுரவாணி ஆகியோரின் அன்புத் தாயும் சகுந்தலா தேவியின் அன்பு மாமியும் தங்கமுத்து, சின்னம்மா, கந்தசாமி, நாகலட்சுமி, செல்வராணி, இந்திராணி, மங்கயர்க்கரசி, செல்வ நாயகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்ம லிங்கம், கந்தையா, இரத்தினேஸ்வரி, சிவராசா, நடராசா, ஜோன் பிள்ளை றஞ்சன், சிவானந்தராசா, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2009) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
8ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (83349) கேதீஸ்வரன் (மகன்).


**STUDY IN INDIA**

**GARDEN CITY COLLEGE**

BANGALORE UNIVERSITY DEGREES

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEWZEALAND and UK*

**Courses Offered**

- **BCA** Bachelor of Computer Application
- **B.Sc.** Computer Science/Microbiology/ Genetics Biotechnology/Fashion and Apparel Design
- **B.A.** Journalism/B.Com Computers
- **BBM** Bachelor of Business Management
- **BHM** Bachelor Of Hotel Management
- **BPT** Bachelor of Physiotherapy
- **LAW** Bachelor of Law

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

**www.studyingcc.com**

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.


## தவறிவிட்டது

கடற்கரைவீதி, பருத்தித்துறை என்னும் முகவரி யுடைய செல்லத்துரை செல்வேந்திரன், (தே.அ.அ.இல. 592292645V) என்பவருடைய, கடற்தொழிற்பா ஸ்ரும், சாரதி அனுமதிப்பத்திரமும் கடந்த (05.03.2009) அன்று ஆனைக்கோட்டைச் சந்திக்கும் காக்கை தீவுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் கள் காக்கைதீவு ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 077 4237830 என்னும் தொலைபேசியுடனும் தொடர்பு கொள்ளலாம்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 9

யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலயத் தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகம் ஆரம் பமாகி நடைபெறவுள்ளது. மதியம் 12 மணிக்கு பூசை நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 9

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு விழா இன்று திங் கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற வுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற முகாமையாளர் திருமதி தேவகி தனராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 9

கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசம யப் பேரவையின் நடராஜப் பெருமான் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடராஜப் பெருமானுக்கு அபி ஷேகம் இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெறும். (203)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 9

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த நபருக்கு சாவகச் சேரி நீதிமன்றில் 20 ஆயிரம் ரூபா அப ராதம் விதிக்கப்பட் டது.

சாவகச்சேரி பொலிஸாரால் சர சாலை தெற்கைச் சேர்ந்த நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்தார்.

அபராதத் தொகை செலுத் தத் தவறின் 10 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-207)


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

1069 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 04 14 15 30

06-03-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500528134 - 500548663

ஜக்பொட் பரிசு ரூபா. 11,820,875/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 219,032 | 20/- | 4,380,640/- |
| 2 இலக்கங்கள் | 20,066 | 40/- | 802,640/- |
| 1 இல. + லக்கினம் | 19,869 | 60/- | 1,192,140/- |
| 2 இல. + லக்கினம் | 1,816 | 200/- | 363,200/- |
| 3 இலக்கங்கள் | 534 | 1000/- | 534,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 11,820,875/- | - |
| மொத்தம் | | | 8,402,620/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 261,378 | | 8,902,620/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 12,309,925/-

தொடர் இலக்கம் 400537024 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| காலி | 500541178-4-02 |
| மொனராகலை | 500540613-0-47 |
| கம்பஹா | 500542267-7-02 |
| ஹம்பாந்தோட்டை | 500536049-8-12 |
| கண்டி | 500528519-5-40 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 04 1942 — விண்ணில் 14 02 1995



### தியாகராசா அரசரத்தினம்

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.காரைநகர்)

திதி: 09.03.2009

அன்பான அப்பாவே!
பாரினை விட்டு நீங்கள் மறைந்துபோய்
ஈரேழு வருடங்கள் கரைந்தாலும்
ஈரவிழிகளோடு உங்கள் நினைவுகளைச் சுமந்து
ஆறாத துயர் கொண்டு வாடி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்காத நினைவோடு:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

## விண்ணக வாழ்வில்

**இரண்டாம் ஆண்டு நினைவு**

தோற்றம் 17 ★ 07 ★ 1935 — மறைவு 09 ★ 03 ★ 2007



அமரர் அந்தோனிப்பிள்ளை அலெக்ஸ்
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)

**ஐந்தாம் மாத நினைவு**

தோற்றம் 23 ★ 09 ★ 1938 — மறைவு 03 ★ 10 ★ 2008



திருமதி பிலோமினம்மா அலெக்ஸ்

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"
அன்பும் பண்பும் தியாகமும் நிறைந்த உங்கள் வாழ்வு
என்றும் எம் மனங்களில் நீங்கா நினைவுகளாய் இருக்கும்

இல.18, புதுமை மாதா கோயில் கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம். (83179) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமணத்திற்கு முன்னர் பெண்கள் 'போலிக் அசிட்' விட்டமின் உபயோகிக்க வேண்டுமா?




கேள்வி: ஆண் வயது 40. மூன்று வாரத்திற்கு முன்னர் அலுவலக மாடிப் படியில் சறுக்கி விழுந்தேன். விழுவதைத் தடுப்பதற்கு வலது முழங்கை படிக்கட்டில் ஊன்றப்பட்டது. அன்று கொஞ்சம் வலி இருந்தது. பக்கத்துத் தெருவில் உள்ள டாக்டர் கையைப் பரிசோதித்து விட்டு - எலும்புகள் ஒன்றும் உடையவில்லை என்று கூறி சில வலி தீர்க்கும் மாத்திரை கள் தந்தார். அடுத்த நாள் வலது தோற் பட்டையில் வலியும், அசைப்பதற்கு சிரமமுமாக இருந்தது. ஒரு வாரத்தில் வலது புற தோற்பட்டை இறுகி விட்டது. வலது கையைத் தூக்கி தலை இழுப்பதோ, சேர்ட் அணிவதோ முடியாமல் போய்விட்டது. கையை மேலே உயர்த்துவது தான் இயலாமல் போய்விட்டதே ஒழிய பொருள்களை கீழே இருந்து தூக்குவது என்பது செய்யக்கூடியதாக இருக்கின்றது. வாதம் என்று சித்தவைத்தியர் ஒருவரிடம் எண்ணெய் வாங்கி பூசினேன் அதற்கும் குணமில்லை பரிகாரம் கூறவும்?

பதில்: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Rotator Cuff Tendinitis என்று தோள் மூட்டுக் கோளாறு. தோள்மூட்டு தசை களினாலும், Tendons என்கின்ற தசை நார் களினாலும் உருவாக்கப்பட்ட ஒரு போலி மூட்டு கையானது - இந்த தசை கள் - தசைநார்களிலான இந்த மூட் டுக்குள்தான் தனது அசைவுகளை நடத்துகின்றது. நீங்கள் முழங்கை அடிபட விழுந்தபோது உங்கள் தோள் மூட்டு தசைகள், தசைநார்கள் தாக் கப்பட்டுள்ளன. முக்கியமாக Supraspinatus என்ற கைகளை உயர்த்த உதவுகின்ற தசை பாதிப்படைந்துவிட்டது. விபத்துக்களால் மாத்திரமன்றி - டென்னிஸ் விளையாட்டு வீரர்கள், நீச்சல் வீரர்கள் போன்றோர் அதிகமாக உபயோகிக்கும் தோள்மூட்டு இயக்கங்களாலும் இந்தக் கோளாறு ஏற்படும். ஆரம்பத்தில் தோள்மூட்டு வலி ஏற்பட்டபோதே - இந்த மூட்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆங்கில வைத்தியத்தில் Resting the injured site, பாதிக்கப்பட்ட பகுதிக்கு நீண்ட ஓய்வு கொடுப்பதுதான் முதலாவது வேலை என்று கட்டாயப் படுத்தப்படுகிறது. நீங்கள் எண்ணெய், தைலம் போட்டுத் தேய்த்து தசைநார்களை மேலும் காயப்படுத்தியிருக்கக் கூடும். இதனால் எண்ணெய், தைல வைத்தியங்களை நான் ஆதரிக்கவில்லை என்பது கருத்தில்லை. இவைகள் தசைகள் ஆரம்ப காயப்படுத்தலிருந்து சுகமானபின்னர் தசை இறுக்கம் என்கின்ற Stiffness ஏற்படும்போது மிகவும் பலனைத் தரும் என்பது உண்மை. தற்பொழுது வலிநீக்கி, வீக்கம் குறைக்கும் - AntiInflam Matory மாத்திரைகளும் - Physlotherapy என்கின்ற இயன்முறை சிகிச்சைகளும் உங்களுக்கு பலனைத்தரும். நீங்கள் Orthopaedic Surgeon என்கின்ற எலும்பு, முறிவு வைத்திய நிபுணரின் ஆலோசனையை முதலில் பெறவும். நிச்சயம் உங்கள் பிரச்சினைக்கு நல்லதீர்வு கிடைக்கும்.

***

கேள்வி: பெண் வயது 25. இரண்டு மாதத்தில் திருமணமாக இருக்கின் றேன். திருமணத் திற்கு முன்னர் இருந்தே Folic Acid என்கின்ற விட்டமின் மாத்திரைகளை உபயோகிக்க வேண்டும் என்று திருமணமான எனது சிநேகிதி கூறுகின்றார். அப்படி இல்லாவிடில் பிறக்கும் குழந்தைக்கு மூளை வளர்ச்சியில் லாது போய்விடும் என்று கூறுகிறார். இது உண்மையா?

பதில்: உங்கள் சிநேகிதி கூறுவது உண்மைதான் என்றாலும், திருமணத்திற்கு முன் என்று கூறுவது கொஞ்சம் மிகையானது. Folic Acid என்கின்ற விட்டமின் Water Solubele என்கின்ற நீரில் கரையக்கூடிய தன்மையுள்ள விட்டமின்களில் ஒன்று. இந்த விட்டமின் மரக்கறிகளிலும் பச்சைக் கீரைவகைகளிலும் நிறைய உள்ளது. ஆனால், மரக்கறி மற்றும் கீரைவகைகளை நாங்கள் நிறைய நேரம் அடுப்பில் வைத்து வேகவைக்கும்போது - இந்த விட்டமின் அநேகமாக தொலைந்து போய்விடுகிறது. இதனால் எமது நாளாந்தத் தேவைக்கான இந்த விட்டமின் அளவு எமக்கு கிடைப்பதில்லை. இந்த விட்டமின் கருவிலுள்ள குழந்தையின் நரம்பு மண்டல வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது. Neural Tube என்கின்ற நரம்பு மண்டலத்தின் ஆரம்ப உறுப்பு சரியாக வளர்வதற்கு இந்த விட்டமின்



தேவையானது. இந்த விட்டமின் குறை வால் இந்த ஆரம்ப வளர்ச்சி தடைப்பட்டு - மூளை மற்றும் Spinal Cord எனப்படும் முள்னான் என்பவை முழுமையான வளர்ச்சியைப் பெறமாட்டா. இதனால் முதுகெலும்பு இடுப்பின் கீழ்ப்பகுதியில் சரியாக இணையாமல் - முன்னான் வெளியே தள்ளப்பட்டு இருக்கும். இதனை Spina Bifida என்று அழைப் பார்கள். சில குழந்தைகளுக்கு மூளையும் - கபால எலும்பும் விருத்தியடையாமல் தலையில்லாத (Anen Cephaly) குழந்தையாக அது பிறக்கும் பல ஆய்வுகளுக்குப் பின்னர்தான் இந்த உண்மை மருத்துவ உலகால் அறியப் பட்டது. சீனாவில் போலிக் அசிட் உபயோகித்ததால் இவ்வகையான நரம்பு மண்டல பாதிப்பு 85 வீதம் குறைக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. அதிகபட்சம் 10 சதம் விலையுள்ள மிகவும் இலகுவில் கிடைக்கக்கூடிய இந்த போலிக் அசிட் மாத்திரைகளை - சரியான பலன் பெறுவதானால் - கர்ப்பம் அடைவதற்கு முன்னர் உபயோகிக்கத் தொடங்கி - கர்ப்ப காலம் முழுவதும் தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். ஏனென்றால் கருவின் நரம்பு மண்டல வளர்ச்சி கரு உருவாகிய காலத்திலிருந்தே தொடங்கி விடுகிறது. இதனால்தான் திருமணமாக உள்ள பெண்களுக்கு மருத்துவர்கள் கருத் தடை முறைகளை அவர்கள் - பின் பற்றும் எண்ணம் இல்லாவிடில் - கருத்தரிக்க முதல் மாதமே உபயோகப் படுத்தச் சொல்லி அறிவுறுத்துகின்றார்கள். அதற்காக - உங்கள் சிநேகிதி கூறுவது போல திருமணத்திற்கு பல மாதங்களுக்கு முன்னரே உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே முதலில் குழந்தை பெறுவதா என்று திட்ட மிடுங்கள், அதன்பிறகு - கருத்தரிக்க முன்னரே மாத்திரையை ஆரம்பியுங்கள்.


***

கேள்வி: வயது 40. ஆண். எனது வலது சுட்டு விரல் மடக்கினால் அப்படியே நின்றுவிடுகிறது. அதனை மற்றக்கையால் பிடித்து நிமிர்த்தினால் நிமிருகிறது. வலி ஒன்றுமில்லை. இது ஏன் இப்படி ஏற்படுகிறது?

பதில்: இதனை மருத்துவத்தில் (Trigger Finger) என்று கூறுவார்கள். துப்பாக்கி விசை (Trigger) யை விரலால் சுடுவதற்கு ஆரம்பிக்கும்போது விரல் எப்படி வளைகின்றதோ, அந்த நிலையில் இந்தக் கோளாறால் பாதிக்கப்பட்ட விரல் நிற்பதே - இப்படி பெயர் வரக் காரணம். இதற்கு சரியான மருத்துவப் பெயர் - (Flexor Digital Tenosyno Vitis) விரல்களை மடக்க நிமிர்த்த - (Tendons) எனப்படும் தசைநார்கள் உதவுகின்றன. இந்த நார்கள் வீக்கம் பெற்று - சுழற்சியுறும்போது - இப்படி நேருகின்றன. இலகுவான அசைவுகளுக்காக - இந்த தசை நார்கள்- ஒரு (Sheath) எனப்படும் திசுவினால் சூழப்பட்டிருக்கின்றது. இந்த சுமைப்பை - ஒரு மின்சார கம்பிக்கு ஒப்பிடலாம். கம்பியைச்சுற்றி பிளாஸ்டிக் மறைப்பு இருப்பதுபோல் - இந்த தசைநாரைச் சுற்றி- இந்த திசு உள்ளது. இந்த திசுக்குழாய்க்குள் தசைநார் இலகுவாக அசைந்து - விரலை மடக்க - நீட்ட உதவுகிறது. இந்த தசைநார் முன்னர் குறிப்பிட்டது போல் வீக்கமடையும்போது இந்த அசைவுகள் பாதிக்கப்படுகின்றன. இது ஏன் ஏற்படுகின்றது என்பது பற்றி பல விதமான கருத்துகள் உள்ளன. கைகளை அதிகமாக உபயோகிக்கும் - உதாரணமாக கத்திரி பிடித்து. துணி - வெட்டுபவர்கள், கத்திரி கொண்டு செடிகளை அழகாக்கும் தோட்டக்காரர்கள் சுத்திகரிகின்ற - குழிதோண்டும், கல் உடைக்கும் இயந்திரங்களை உபயோகிப்பவர்கள், நீண்ட நேரம் விரல்களால் தட்டச்சு கணினி வேலைகள் செய்பவர்கள், பியானோ போன்ற வாத்தியங்களை வாசிப்பவர்கள் என்போர்களிடையே இந்த கோளாறு அதிகமாக காணப்படுவதாகத் தெரிகிறது. மேலும் சில நோய்கள் உள்ள - உதாரணமாக (Rhenmatoid Arhritis) போன்ற வாதம் சம்பந்தமான நோயாளரிடையேயும் இந்தக் கோளாறு காணப்படுகிறது. இதனது சிகிச்சையின்போது வீக்கமடைந்த தசைநார் இடையே - (Corticoteroid) ஊசி மருந்தை ஏற்றி குணமாக்கலாம். இப்படிச் செய்தும் பலன் காணாவிடில் - சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

கேள்வி: டாக்டர் அவர்களே - இந்த வினா நேரடியாக நோயைப் பற்றி [illegible] என்னைப் போன்ற தாய்மார்களின் சந்தேகங்களை போக்கும் என்பதால் இங்கு தருகின்றேன்.

கேள்வி இதுதான். எனது 2 வயது குழந்தைக்கு காய்ச்சல் வந்தால் வெப்பமானி (Thermometer) அக்குளில் (Axilla) வைத்து காய்ச்சலை பார்த்து - மருந்து கொடுப்பேன். அன்று ஒருநாள் காய்ச்சல் இல்லாமல் குழந்தை நடுங்கி கொண்டிருக்க - வெப்பமானி வைத்து பார்த்தபோது காய்ச்சல் இல்லை என்று தெரிந்தது. ஆனால், டாக்டரிடம் கொண்டு சென்றபோது - அவர் குழந்தையின் மல வாசலில் உண்ணமானி வைத்து காய்ச் சல் இருப்பதாகக் கூறி மருந்து செய்தார். குழந்தைகளுக்கு காய்ச்சல் பார்க்க வெப்பமானியை எப்படி உபயோகிப்பது.?



பதில்: மருத்துவத்தில் உபயோகப் படுத்தும் வெப்பமானிக்கு Clinical Thermo Meter என்று பெயர். இது மனித உடலின் வெப்ப நிலைக்கு ஏற்றவாறு - பாரன்ஹைட் 95 டிகிரியிலிருந்து 106 டிகிரி வரையும் அல்லது சென்றிகிரேட் 35 டிகிரியிலிருந்து 42 டிகிரிவரையும் அளவுபடுத்தப்பட்டிருக்கின்றது. இதனை அக்குளில் Armpit வைத்து வெப்பத்தை அளக்கலாம். அல்லது நாக்கின் அடியில் வைத்து வெப்பத்தை அளக்கலாம். சிறுவர்களுக்கு அக்குளிலும், பெரியவர்களுக்கு நாக்கின் கீழ் வைத்தும் வெப்பம் அளக்கப்படுகிறது. அக்குளில் வைக்கும்போது குறைந்தது 4 அல்லது 5 நிமிடம் வரையாவது வைத்து எடுத்தால்தான் வெப்பம் சரியாக அளக்கப்படும். நாக்கின் கீழ் வைக்கும் போது குறைந்தது 2 - 3 நிமிடங்கள் வைக்கப்படவேண்டும் அக்குளில் வைத்து எடுக்கப்படும் வெப்ப நிலை உடல் வெப்பநிலையை விட ஒரு டிகிரி குறைவாக இருக்கும். காரணம் - அக்குள் வியர்வை, சூழல் காரணமாக குளிர்ந்து இருப்பதே. அத்துடன் சரியான இடத்தில் உள்ளே முழுவதுமாக வைக்கப்படாவிடில் பிழையான வெப்பநிலையைக் காட்டும். குழந்தைகளுக்கு மலவாசலில் வைத்து வெப்பநிலை பார்ப்பதற்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட வெப்பமானிகள் உண்டு. இந்த வெப்பமானிகளின் நுனிப்பகுதி - இலகுவில் உடைந்துவிடாத வகையிலும், இலகுவில் செலுத்துவதற்கு ஏதுவாக குண்டு முனையாகவும் அமைக்கப்பட்டிருக்கும். இந்த வகை வெப்பமானியை Rectal Thermometer எனக் குறிப்பிடுவார்கள். முன்னர் குறிப்பிட்ட Clinical Thermometer வகை - எக்காரணம் கொண்டு மல வாசலில் வைக்கக் கூடாது. அதனது பூணிப்பகுதி - மெல்லிய கண்ணாடியாலானது என்பதால் - உடையக்கூடிய தன்மையது. குழந்தைகளைப் பொறுத்த மட்டிலும் மேலும் இணிட்ச் எனப்படும் மயக்க நிலையிலிருக்கும் நோயாளிகளுக்கும் - இந்த rectal Thermometer உகந்தது. இந்த வெப்பமானி - உடல் வெப்பத்தின் அளவை சரியாக காட்டும். இந்த வெப்பமானிகள் இன்று எல்க்றோனிக் digital வகையிலும் வந்துள்ளன. இந்த வகை வெப்பமானிகளை உபயோகிக் கும்போது - குழந்தையை ஆடாமல் அசையாமல் படுக்க வைத்து பிடித் துக்கொண்டு வெப்பமானியின் நுனிப் பாகத்தில் மலவாசலில் இலகுவாக செலுத்தக்கூடிய விதத்தில் Jelly பூசி - உள்ளே செலுத்தவேண்டும். குறைந்தது 2 நிமிட நேரமாவது வைத்திருக்க வேண்டும்.

இப்பொழுது குழந்தைகளுக்கு காதி னுள், ஒளிக்கற்றையை ஒரு சில செக்க னுக்கு செலுத்தி குழந்தைக்கு சிரமமில் லாமல் அளக்கமுடியும். சிறிய விஷயம் என்றாலும் - மற்ற பெற்றோர்களுக்கு இது பற்றி விளக்கசந்தர்ப்பம் தந்த உங்களுக்கு எனது நன்றி.

***

**இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்**

நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம். நீண்டகால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான

**டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்**

பதில் தருகிறார்

**இலவச மருத்துவ ஆலோசனை**

உதயன்

381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் இன்றைய பரிதாபநிலைக்கு காங். அரசே காரணம் என்கிறார் அத்வானி

## இலங்கையில் கொல்லப்படும் தமது சகோதரர்களுக்காக தமிழக மக்கள் படும் வேதனையை புரிந்து கொள்கிறாராம்

நாகர்கோவில், மார்ச் 09

**இலங்கையில் உள்ள தமிழர்களின் பரிதாப நிலைக்கு காங்கிரஸ் அரசுதான் காரணம். அவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு செயலற்றுக் கிடக்கிறது. ஆகவே, தமிழகத்திலுள்ள மக்கள் இலங்கையில் கொல்லப்படும் தங்கள் சகோதரர்களுக்காக படும் வேதனைகளை, கவலைகளை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.**

**- இவ்வாறு பா.ஜ.க. மூத்த தலைவரும், இந்திய எதிர்க்கட்சித் தலைவருமான அத்வானி குற்றம்சாட்டியுள்ளார்.**

பாரதிய ஜனதாக் கட்சியின் மக்களவைத் தேர்தல் பிரசாரத்தை நாகர்கோவிலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடக்கிவைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

சோனியா காந்தியின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள மத்திய அரசின் செயற்பாட்டையும், வாஜ்பாய் ஆட்சிக் காலத்தின் செயற்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்து மக்கள் வாக்களிக்க வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்கள், மலேசியாவில் வாழும் தமிழர்கள் தொடர்பாக கவலைப்படும் தமிழக மக்களை நான் பாராட்டுகின்றேன். இலங்கையில் உள்ள தமிழர்களின் பரிதாப நிலைக்கு காங்கிரஸ் அரசுதான் காரணம். அவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே, தமிழகத்தில் உள்ள மக்கள் இலங்கையில் கொல்லப்படும் தங்கள் சகோதரர்களுக்காக படும் வேதனைகளை, கவலைகளை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாதம், வங்கதேசத்திலிருந்து ஊடுருவல், நேபாளத்திலிருந்து மாவோயிஸ்ட் அச்சுறுத்தல், இலங்கையில் தமிழர் பிரச்சினை என்றெல்லாம் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்காமல் அரசு நிர்வாகம் தோற்றுப்போய்விட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, நாடாளுமன்றத்தை தாக்கவந்த பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்குக் காரணமானவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க அனைத்து நீதிமன்றங்களும் தீர்ப்புக் கூறின. ஆனால், அத் தீர்ப்பு நிறைவேற்றப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர் அப்சல்குரு என்பதால் தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

இதன்மூலம் காங்கிரஸ் கட்சி வாக்கு வங்கி அரசியல் நடத்துகிறது என்பது தெளிவாகிறது. தங்கள் வாக்கு வங்கியைக் காப்பாற்ற நாட்டின் பாதுகாப்பைப் பேரம் பேசத் தொடங்கியுள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு உணர்வில்லாமல் செயலற்றுக் கிடக்கிறது.

நாட்டில் மூன்றாவது அணி உருவாகவே முடியாது. மத்தியில் பா.ஜ.க. அல்லது காங்கிரஸ் ஆதரவு இல்லாமல் யாரும் இனியும் ஆட்சிக்கு வரமுடியாது. நல்லாட்சி, வளர்ச்சி, பாதுகாப்பு என்ற 3 செயற்திட்டங்களை முன்வைத்துப் பிரசாரம் செய்கிறோம்.

உலகமே மாற்றத்தை எதிர்பார்க்கிறது. அதுபோல இந்தியாவும் மாற்றத்தை எதிர்பார்த்திருக்கிறது. வரும் மே மாதம் தேர்தலுக்குப் பின்பு உங்களை மீண்டும் சந்திக்கும்போது அரசியல்வானில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

கன்னியாகுமரி முக்கடல் சங்கமிக்கும் பாறைகளின் நடுவே விவேகானந்தர் மண்டபம் அமைக்க ஒப்புதல் வழங்கியதற்காக அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, முதல்வர் கருணாநிதி ஆகியோருக்கு நன்றி - என்றார்.

கன்னியாகுமரி தொகுதி பா.ஜ.க. வேட்பாளராக பொன்.ராதாகிருஷ்ணன் போட்டியிடுவார் என்றும், தமிழகத்தில் முதன்முதலாக அறிவிக்கப்பட்ட வேட்பாளர் பொன்.ராதாகிருஷ்ணன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக திருவனந்தபுரம் வந்த அவர் நேராக சுவாமிதோப்பு சென்று, ஐய்யா வைகுண்டசுவாமி தலைமைப் பதியில் வழிபட்டார். அப்போது, ஐய்யா வைகுண்டரின் பெருமைகளை அவர் புகழ்ந்துரைத்தார்.

ஈழத் தமிழரைக் காக்க வழி பிறக்குமா?



நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை நாகர்கோவிலில் தொடங்கும் முன்னர் திருவனந்தபுரம் ஐய்யா வைகுண்டசுவாமியை வழிபடுகிறார் பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் எல்.கே.அத்வானி.

# மத்தியில் மீண்டும் ஆட்சி: கனவு காண்கின்றது காங்.

## பரதன் கூறுகிறார்

ஐதராபாத், மார்ச் 09

மத்தியில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என காங்கிரஸ் கனவு காண்கிறது - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஐதராபாத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் இளைஞர் பிரிவான அகில இந்திய இளைஞர் கூட்டமைப்பின் 3 நாள் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

கடந்த மக்களவைத் தேர்தலின்போது இந்தியா ஒளிர்கிறது என்று பிரசாரம் செய்து ஆட்சியைத் தக்க வைத்து கொண்டுவிடலாம் என்று பா.ஜ. கனவு கண்டது. ஆனால், அது வெறும் பகல் கனவானது. இப்போது, ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டு விடலாம் என்று காங்கிரஸ் கனவு காண்கிறது. இதுவும் பகல் கனவாகவே முடியப் போகிறது. இடதுசாரிகள் மற்ற கட்சிகளும் சேர்ந்து மாற்று அணியை உருவாக்கியுள்ளன. 3ஆவது அணியை 3ஆம்தர அணி என்று பா.ஜ.க. தலைவர் வெங்கையநாயுடு விமர்சிக்கிறார். அவர் நாக்கை அடக்க வேண்டும். இல்லாவிடில் அவருக்கு சரியான பாடம் புகட்டப்படும் - என்றார்.

# தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசினால் நடவடிக்கை

## கூடுதல் டி.ஜி.பி. எச்சரிக்கை

சென்னை, மார்ச் 09

இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகவும் செயற்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று சட்டம் - ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி.ராஜேந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கடந்த மாதம் 26ஆம் திகதி திண்டுக்கல்லில், பெரியார் திராவிடர் கழகம் 'ஈழம் எரிகிறது' என்ற தலைப்பில் பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தது.

அதில், அக்கழகத்தின் மாநில தலைவர் கொளத்தூர் மணி, இந்திய இறையாண்மைக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் வகையிலும், தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகவும் பேசியிருந்தார். அதனால், அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, சார்பு ஆய்வாளர் ராஜசேகரன் முறைப்பாடு கொடுத்தார்.

அதைத்தொடர்ந்து, திண்டுக்கல் வடக்கு பொலிஸ் நிலையத்தில் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967இன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர், கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

அதேபோல், திருப்பூரில் கடந்த முதலாம் திகதி அனைத்து மாணவர் கூட்டமைப்பு சார்பில் 'நாதியற்றவனா ஈழத் தமிழன்' என்ற தலைப்பில் கூட்டம் ஒன்று நடந்தது. இந்த கூட்டத்தில் ம.தி.மு.க. கொள்கை விளக்க அணிச் செயலாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டுபேசினார். அப்போது -

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை, சேலை கட்டிய முசோலினி என்றும், தனித் தமிழ்நாடு உருவாக வேண்டும் என்றும் பேசியிருக்கிறார். மாணவர்களைத் தூண்டிவிடும் வகையில் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், பிரிவினையைத் தூண்டும் வகையிலும், மாநிலத்தில் கிளர்ச்சி ஏற்படும் வகையிலும் அவரது பேச்சு அமைந்திருக்கிறது.

இதுகுறித்து திருப்பூர் கருவம்பாளையத்தைச் சேர்ந்த கணேஷ், திருப்பூர் வடக்கு பொலிஸ் நிலையத்தில் அளித்துள்ள முறைப்பாடு தொடர்பாக, அவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகவும் செயற்படுபவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.

# இந்திய வைத்தியக்குழு இலங்கை செல்வது தமிழக மக்களை ஏமாற்றும் நாடகமே

## பழ. நெடுமாறன் கூறுகிறார்

''தமிழக மக்களை ஏமாற்றி வாக்குகள் பெறவே இலங்கைக்கு இந்திய மருத்துவக் குழுவினை மத்திய அரசு அனுப்பவுள்ளது.

-இவ்வாறு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து 52 பேர்களைக் கொண்ட இந்திய இராணுவ மருத்துவக் குழு அங்கு செல்ல இருக்கிறது என வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு மாநிலத்தில் உள்ள கடலோரப் பகுதியில் அமைந்திருக்கும் புல்மோட்டை என்ற இடத்தில் வைத்தியசாலை அமைத்து அங்கிருந்து மருத்துவ உதவி செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு இலங்கை இராணுவம் பாதுகாப்பு வழங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் முள்ளியவளை, வள்ளிப்புனம், விசுவமடு, உடையார்கட்டு, மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலிருந்த வைத்தியசாலைகள் அழிக்கப்பட்டன. ஏராளமான நோயாளிகளும், மருத்துவத்



துறையைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இயங்கிய வைத்தியசாலைகள் அழிக் கப்பட்ட நிலையில் இந்திய வைத்தியசாலைக்கு தமிழர்கள் யாரும் வரமாட்டார்கள். அவ்வாறு வருவது அவர்களின் உயிர்களுக்கு அபாயத்தை விளைவிக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்க வேண்டிய சூழ்நிலையின் காரணமாக தமிழக மக்களை ஏமாற்றுவதற்கு இத்தகைய அறிவிப்புகளை இந்திய அரசு வெளியிடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உண்மையில் ஈழத் தமிழர்களுக்கு மருத்துவ செய்வதற்கு உதவி இந்தியா விரும்பினால், செஞ்சிலுவைச் சங்கம் அங்கு செயற்படுவதற்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்கம் வெளியேற்றப்பட்டதையோ, மருத்துவமனைகள் அழிக்கப்பட்டதையோ இதுவரை கண்டிக்காத இந்திய அரசு இப்போது மருத்துவ உதவி செய்யப்போவதாக நா[illegible] மக்கள் எ[illegible] போதும் நம்ப மா[illegible] என்றுள்ளது.

# நீதிமன்றப் புறக்கணிப்புப் போர் தொடரும்

## நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவின் அறிக்கைக்கு எதிராக இன்று ஆர்ப்பாட்டம்; சட்டத்தரணிகள் அறிவிப்பு

சென்னை, மார்ச் 09

நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் - என்று சட்டத்தரணிகளின் மாநில அளவிலான கூட்டு நடவடிக்கைக் குழு நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிவித்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெற்ற தடியடிச் சம்பவம் தொடர்பாக, நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையிலான குழுவின் அறிக்கை உச்சநீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின் விவரம் வெள்ளிக்கிழமை வெளியானது. சட்டத்தரணிகள்தான் சம்பவத்துக்கு முக்கிய காரணம் என்றும், பொலிஸார் அத்துமீறி நடந்துள்ளனர் என்றும் அறிக்கையில் கூறப்பட்டது. இந்த அறிக்கைக்கு சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து, அறிக்கையைப் பரிசீலிக்கப் போவதில்லை எனவும், இதுதொடர்பாக உயர் நீதிமன்றமே விசாரணை நடத்த வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விவாதிப்பதற்காக, சட்டத்தரணிகளின் மாநில அளவிலான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.சி. போல்கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு -

நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா கமிஷனின் அறிக்கையை நிராகரிக்கிறோம். சட்டத்தரணிகள், நீதிபதிகள் தொடர்பாக நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா தேவையற்ற கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இது கண்டனத்துக்குரியது. நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவின் அறிக்கையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை (இன்று) நடத்தப்படும்.

தடியடிச் சம்பவத்தில், தமிழக டி.ஜி.பி., சென்னை மாநகரப் பொலிஸ் கமிஷனர் ஆகியோரைப் பாதுகாக்கும் வகையில் செயற்படும் மாநில அரசைக் கண்டிக்கிறோம்.

உயர் நீதிமன்றத்தில் பொலிஸ் தாக்குதலுக்குக் காரணமான பொலிஸ் அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு 9 மூத்த சட்டத்தரணிகள் அடங்கிய குழு அமைக்கப்படுகிறது.

உயர் நீதிமன்ற வன்முறை தொடர்பாக, மூத்த சட்டத்தரணி ஏ.நடராஜன் தலைமையிலான விசாரணைக் கமிஷனை பார் கவுன்ஸில் அமைத்துள்ளது. இதற்காக பார் கவுன்ஸிலுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.

உண்மையான விவரங்களை பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில், ஸ்ரீகிருஷ்ணா அறிக்கைக்கு மறுப்பு வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றத் தாக்குதலைக் கண்டித்து ஆளுநர் மாளிகையை நோக்கி சட்டத்தரணிகள் பேரணி விரைவில் நடத்தப்படும் என்று தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

# நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவின் அறிக்கை ஏமாற்றம் அளிக்கிறது - நெடுமாறன்

சென்னை, மார்ச் 09

சென்னை உயர்நீதிமன்றச் சம்பவம் குறித்த நீதிபதி ஸ்ரீகிருஷ் ணாவின் அறிக்கை ஏமாற்றத்தை அளிக்கிறது என்று பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சென்னை உயர்நீதிமன்றில் அனுமதிக்கப்பட்ட அளவைத்தாண்டி பொலிஸார் தாக்குதல் நடத்தினர். பொலிஸாரின் இந்த அத்துமீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது என்று நீதிபதி கிருஷ்ணா கூறியுள்ளார்.

300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளைத் தாக்கி படுகாயப்படுத்தியும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களைச் சேதப்படுத்திய [illegible] அவர்களை ஏவிய அதிகாரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்கு பரிந்துரை செய்யாமல் மென்மையான சொற்களால் மட்டுமே அவர்களைக் கண்டித்துள்ள நீதிபதி, சட்டத்தரணிகள் ரவுடிகள் என வர்ணித்துள்ளதே அவருக்கு உள்நோக்கம் உள்ளது என்பதை வெளிபடுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள் ஒரு மாதத்திற்கு மேலாக இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக அறவழியில் போராடினார்கள். இதை மறைத்து அவர்கள் மீது வீண் பழிகளைச் சுமத்தி பிரச்சினையைத் திசை திருப்ப நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா முயற்சி செய்கிறார்.

எனவே, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் அமைக்கப்படவிருக்கிற மக்கள் விசாரணை குழு விரைவில் தனது விசாரணையை தொடங்கும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது தொடரிலும் முன்நிலையில் இந்தியா கடுமையாப் போராடித் தோற்றது நியூஸிலாந்து

கிறிஸ்ட்சர்ச், மார்ச்9

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நியூஸிலாந்து சென்றுள்ள டோனி தலைமையிலான இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதலில் நடந்த ஒரு நாள் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. அடுத்த நடந்த இரண்டாவது ஒரு நாள் போட்டி மழை காரணமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் கிறிஸ்ட்சர்ச்சில் நேற்று மூன்றாவது ஒருநாள் போட்டி நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

சதம் கடந்த மகிழ்ச்சியில் சச்சின்



முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் (163), யுவராஜ் சிங் (87), அணித் தலைவர் டோனி (68), சுரேஷ் ரெய்னா (38) ஆகிய முதல் நிலை வீரர்கள் கைகொடுத்தனர்.

இந்தியா 50 ஓவரில் நான்கு விக்கெட்டுகள் இழப்பிற்கு 392 ஓட்டங்களைக் குவித்தது. இது சர்வதேச ஒருநாள் அரங்கில் இந்திய அணியின் இரண்டாவது அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

பின்னர் கடின இலக்கை விரட்டிய நியூஸிலாந்து அணி 45.1 ஓவரில் 334 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ஜெசி ரைடர் (105), பிரண்டன் மக்கலம் (71), கைல் மில்ஸ் (54), டிம் சவுத்தி (32), ஓரளவு நம்பிக்கை தந் தனர்.

இந்தியா சார்பில் சகீர்கான், யுவராஜ், ஹர்பஜன் சிங் தலா 2 விக்கெட்டுகளை வீழ்தினர். இதன் மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கின்றது.

ஆட்டநாயகனாக நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் தெரிவுசெய்யப்பட்டார். இவ்விரு அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி எதிர் வரும் 11ஆம் திகதி ஹமில்டனில் நடக்கவிருக்கிறது.

## உலக கோப்பைப் போட்டியில் சச்சின் விளையாட வேண்டும்

பாட்னா, மார்ச்9

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் செளரவ் கங்குலி பாட்னாவில் அளித்த ஒரு பேட்டியில், ''2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடக் கூடிய முழுத்திறமை சச்சின் டெண்டுல்கரிடம் இருக்கிறது. அதில் அவர் விளையாடவேண்டும். ஆனால் அது குறித்து முடிவு எடுக்கும் உரிமை அவருக்கு தான் உண்டு. லாகூரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடந்த தாக்குதல் சம்பவம், பாகிஸ்தான் இப்போது விளையாடுவதற்கு ஏற்ற பாதுகாப்பான நாடு இல்லை என்பதை நிரூபித்து உள்ளது' என்றார். நான் அரசியல் கட்சியில் சேரப்போவதாக வந்த தகவல்கள் அனைத்தும் வதந்தி. நான் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சேர மாட்டேன் - என்றும் கங்குலி தெரிவித்தார்.

## பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் பாகிஸ்தானை பந்தாடியது இந்தியா!

போவ்ரல், மார்ச்.9

பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை எளிதில் வீழ்த்தி அபாரமான தொடக்கம் கண்டது.

பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் 9ஆவது பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்தப் போட்டியில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா உள்பட 8 அணிகள் கலந்துகொண்டுள்ளன.

இந்தப் போட்டியின் முதல் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதின. முதலில் ஆடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 277 ஓட்டங்கள் குவித்தது. டெய்லர் 101 ஓட்டங்கள் சேர்த்தார்.

பின்னர் ஆடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களே எடுத்தது. இதனால் இங்கிலாந்து அணி 100 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2ஆவது லீக் ஆட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தானை சந்தித்தது. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, இந்திய வீராங்கனைகளின் அபார பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் 29 ஓவர்களில் 57 ஓட்டங்களுடன் சுருண்டது. இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 58 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அனகா தேஷ்பாண்டே 26 ஓட்டங்களும், அஞ்சும் சோப்ரா 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தனர்.

## 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
# அவுஸ்திரேலிய பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி திணறல்

டர்பன், மார்ச்9

டர்பனில் நடந்து வரும் 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தென்னாபிரிக்க அணி திணறி வருகிறது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி டர்பனில் நடந்து வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்ப ஆட்டக்காரர்களின் சதத்தின் உதவியுடன் முதல் நாளில் 4 விக்கெட்டுக்கு 303 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் 2ஆவது நாளான நேற்றுமுன்தினம் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 352 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தது. அந்த அணி கடைசி 4ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது குறிப்பிடத்தக்கது. மைக் ஹஸ்ஸி 50 ஓட்டங்களும், நார்த் 38 ஓட்டங்களும் எடுத்தனர். தென்னாபிரிக்க தரப்பில் ஸ்டெயின் 3 விக்கெட்டுகளும், நிருனி, கலீஸ், ஹாரிஸ் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினார்கள்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலிய பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறியது. ஜான்சன் வீசிய முதல் ஓவரிலேயே மெக்கன்சி (0), ஆம்லா (0) ஆகியோரின் விக்கெட்டுகள் காலியானது. ஜான்சனின் அடுத்த ஓவரில், சுமித் காயமடைந்தார். அவர் வீசிய பந்து சுமித்தின் கையைத் தாக்கியது. வலியால் துடித்த அவர் (2 ஓட்டம்) அத்துடன் ஓய்வுபெற்றார்.

இதன் பின்னரும் ஜான்சனின் தாக்குதல் நீடித்தது. அவர் வீசிய ஒரு பந்து கலீஸின் ஹெல்மெட்டையும் தாண்டி தாடையைப் பலமாகத் தாக்கி ரத்தம் கொட்டியது. இதனால் அவரும் ஓய்வு பெற்றார்.

இதன் பின்னர் டுமினி ஒரு பக்கம் போராட மறுபக்கம் விக்கெட்டுகள் சரிந்தன. காயத்துக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டு மீண்டும் களம் கண்ட கலீஸ் (22 ஓட்டங்கள்) வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினார்.

தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டுமினி 73 ஓட்டங்களுடனும் (152 பந்து, 11 பவுண்டரி), ஸ்டெயின் 8 ஓட்டங்களுடனும் நிருனி ஓட்டம் எதுவும் எடுக்காமல் பேன வேகத்தில் திரும்பினார். அவுஸ்திரேலிய தரப்பில் ஜான்சன், மெக்டொனால்ட் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதற்கிடையே, காயமடைந்த தென்னாப்பிரிக்க அணித்தலைவர் சுமித்துக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் அவரது சுண்டு விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. 2 முதல் 3 வாரங்கள் வரை ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியிருப்பதால், சுமித் 3ஆவது டெஸ்டில் ஆடமாட்டார்.

## சூடானிய ஜனாதிபதி டாபூருக்கு விஜயம் செய்வார்

கார்ட்டூம், மார்ச் 9

சூடானிய ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர், டாபூர் பிராந்திய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். டாபூர் படுகொலைகள் தொடர்பாக, தம்மைக் கைது செய்வதற்காக, சர்வதேச நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் இவர் மேற்கொள்ளும் முதல் டாபூர் பிராந்திய விஜயம் இதுவாகும்.

சூடானிய தலைநகரான கார்ட்டூமில் நிகழ்ந்த மாபெரும் பேரணியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார். அவர் தம் உரையில், அதிவிரைவில் தாம் டாபூர் பிராந்திய விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்பதை தெரிவித்துக் கொண்டார்.

''என்னோடு எவரொருவராவது சண்டையிட வேண்டுமா? அப்படியானால், சூடானுக்கு வாருங்கள். இதற்கு மாறாக பிடியாணையைப் பிறப்பித்து, வீறாப்பு காட்டாதீர்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் சூடானை விட்டு உடனடியாக வெளியேறிவிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ள மனிதநேய தொண்டு நிறுவனங்களைப் பற்றியும் அவர் தமதுரையில் பிரஸ்தாபித்தார். ''வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள 13 உதவி முகவர் நிறுவனங்களைச் சேர்ந்த அனைவரும் ஒட்டு மொத்த திருடர்கள்'' என அவர் வர்ணித்தார்.

''மனிதாபிமான பணிகளுக்காக அவர்கள், அவற்றிற்கான வரவு-செலவுத் திட்டங்களில் 99 சதவீதமான நிதிகளை ஈட்டியுள்ளார்கள். எனினும், டாபூர் மக்களுக்கென ஒரு சதவீதத்தையே செலவிட்டுள்ளார்கள். பெரும்பகுதியைச் சுருட்டி, ஏப்பம் விட்டுள்ளார்கள். எனவே, இவர்கள் ஒட்டுமொத்த திருடர்கள்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தலைநகரில் சனிக்கிழமை நிகழ்ந்த இப்பேரணியில், தென் சூடானிலிருந்து வந்து பெருந்தொகையான ஆதரவாளர்களும் கலந்து கொண்டார்கள். முதல் நாளான வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேரணியில் தாம் நடனமாடியது போல, இப்பேரணியிலும் அவர் நடனமாடி குதூகலித்தார்.

ஒமர் அல்-பஷீர் பாரம்பரிய உடை தரித்திருந்தார். கழுத்தில் சிறு மணிகளால் தொடுக்கப்பட்ட மாலைகள் அணிந்திருந்தார். சிறு மணிகள் பல்வேறு வர்ணங்களில் ஜொலித்தன. சிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட தலைக்கவசம் அணிந்து கம்பீரமாகக் காட்சியளித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''எவராவது எங்களோடு சண்டையிட வேண்டுமா? அப்படியானால் ஐ.நா. பாதுகாப்புச் சபையினதோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினதோ தீர்மானத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு வராதீர்கள்'' என்றார்.

''அவர்கள் தாங்களாகவே எங்களோடு சண்டையிட, எங்கள் மண்ணுக்கே வர வேண்டும். என்னிடம் கேள்விகள் கேட்பதற்கு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? என்ன யோக்கியதாம்சம் அதனிடம் இருக்கின்றது?'' என்றும் அவர் சரமாரியான கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

''இந்த நீதிமன்றம் பாரபட்சமற்ற ஒரு நீதிமன்றமாக இருக்குமானால், முதலில் இது உலகில் படுபாதகமான செயல்களில் ஈடுபட்டுவரும் அமெரிக்கர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அதுதான் முறைமை. நீதி'' என்றும் அவர் கூறினார்.

''இது நீதிக்கான ஒரு நீதிமன்றமா? அமெரிக்கர்கள் இதன் உறுப்பினர்களா? இது நீதிக்கான ஒரு நீதிமன்றமாக இருக்குமானால், ஏன் மனித உயிர்களோடு [illegible] விசாரணைக்கு [illegible]?'' என்றும் அவர் கேள்விகளை அடுக்கினார்.

## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 28 பேர் பலி; 57 பேர் படுகாயம்

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தின் மத்தியிலுள்ள பொலிஸ் சேவைக்கு ஆள்கள் திரட்டும் நிலையமொன்றில் நேற்று ஞயிற்றுக் கிழமை இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டனர். 57 பேர் படுகாயம் அடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இந்நிலையத்திற்கு வெளியே, பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ள வந்திருந்தவர்கள் திரண்டு நின்றார்கள். அப்போது, மோட்டார் சைக்கிளொன்றில் அவ்விடத்துக்கு விரைந்து வந்த ஒருவர், கூட்டத்தினர் மத்தியில் தான் பதுக்கி வைத்திருந்த குண்டை வெடிக்கவைத்தார் என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த ஆள்சேர்ப்பு நிலையம் பலஸ்தீன வீதியில் அமைந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த நபரும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ளவே வருகிறார் என முதலில் ஊகிக்கப்பட்டது. எனினும், இந்த ஊகம் பிழைத்துவிட்டது என பொலிஸ் அதிகாரியொருவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதலுக்குப் பலியானோரில் பொலிஸார், பொலிஸ்சேவையில் இணைந்து கொள்ளவந்தவர்கள், சிவிலியன்கள் ஆகியோரும் அடங்குவர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 07.02.2009 சனிக்கிழமை
அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர்
### சின்னத்தம்பி ஞானமூர்த்தி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.03.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

'ஞானபதி'
இணுவில் மேற்கு,
இணுவில்.

பிரசன்னத்தை பிரியமுடன்
எதிர்பார்க்கும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பரநிருபசிங்கம் குணரட்ணம்



(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

புங்குடுதீவு, மூன்றாம் வட்டாரம் நடுவுத்துருத்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற தபால் ஊழியருமான பரநிருபசிங்கம் குணரட்ணம் (பீயோன் குணம்) நேற்று (08.03.2009)ஞாயிற்றுக்கிழமை காரை நகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சோதி தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகநாதன்(கனடா), தனபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராமநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிறேமகுமார், கிருஷ்ணகுமார், சிவகுமாரி, சுகுமாரி, கேதீஸ்வரன், தெய்வகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிமேகலா, ரதிதேவி, ராகவன், சிறிதரன், சுஜாதா, அருள்மணி ஆகியோரின் அன்பு மாமனும் அனோஜன், பவித்திரா, சகீதன், அர்ஜன், ஆரணியா, சுரேகா, அபீரன், அனேஸ், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.03.2009) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கன்னன் தாழ்வு மேற்கு காரை நகரில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி-001 514 731 2958(கனடா),
கேதீஸ்வரன்-0049 8983964386(ஜேர்மனி).

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.





# இலங்கையில் நடைபெறும் போரைக் கண்டித்து சென்னையில் ஓவியர்கள் தூரிகைப் போராட்டம்

சென்னை, மார்ச் 09

சென்னையில் கருத்துரிமைக்களம் எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 'தூரிகைகளின் துயரப்பதிவுகள்' என்னும் தூரிகைப் போராட்டத்தில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான ஓவியர்கள் இலங்கை யில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் போரைக் கண்டித்து ஓவியங்களை வரைந்தார்கள்.

சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரபல ஓவியர்கள், ஓவியக்கல்லூரி மாணவர்கள், பிரபல கேலிச்சித்திரம் வரைபவர்கள், காட்சி ஊடக மாணவ மாணவிகள், எழுத்தாளர்கள், வழக்கறிஞர்கள், கவிஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரபல கேலிச்சித்திரம் வரைபான மதன் நிகழ்வினை தொடக்கி வைக்க, சென்னை ஓவியக்கல்லூரி முதல்வரும் ஓவியருமான சந்துரு ஓவியம் வரைந்தார். வீரசந்தானம், மணியன் செல்வம், அரஸ், மாருதி, விஸ்வம், ஸ்யாம், மனோகர், நெடுஞ்செழியன், போன்ற பல பிரபல ஓவியர்களும் தங்கள் உணர்வுகளை ஓவியமாக வெளிப்படுத்தினார்கள். வரைந்து முடிந்த ஓவியங்களை பொதுமக்களின் பார்வைக்கு வைத்த போது பலரும் வந்து பார்த்து மனம் கலங்கிச் சென்றனர்.

இந்த ஓவியங்களை தியாகி முத்துக்குமாரின் நினைவோடு இணைத்து தமிழகம் எங்கும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கவும் ஊர்வலமாக எடுத்துச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூரிகைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை வாழ்த்தி உரையாற்றிய போது திரைப்பட பாடலாசிரியர் தாமரை தெரிவித்தவை வருமாறு:-

''இவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தும் இன்னும் இந்தப் போரை இலங்கை பேரினவாதிகள் நடத்துகிறார்கள் என்றால் அது இந்தியா கொடுக்கிற ஆதரவில்தான்.

இந்த லட்சணத்தில் இந்திய இறையாண்மை தொடர்பாக வாய் கிழியப் பேசுகிறார்கள் இவர்கள். இந்திய இறையாண்மைக்கு மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு வேட்டு வைக்கின்றது அதுதான் உண்மை - என்றார். (அ-சி)

## வன்னியிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களில் 36 பேர் சிகிச்சை பலனின்றி மரணமானார்கள்

திருகோணமலை, மார்ச் 9

கடந்த பெப்ரவரி மாதம் பதினொராம் திகதி முதல் இம் மாதம் ஆறாம் திகதி வரை வன்னிப் பிரதேசத்தில் இருந்து சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினால் அழைத்து வரப்பட்டவர்களில் 36 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலை வைத்தியசாலையில் 27பேரும் கண்டி வைத்திய சாலையில் 7பேரும் கொழும்பு வைத்தியசாலையில் 2 பேரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை வைத்திய சாலையில் இருந்து இதுரை 150 பேர் சிகிச்சை முடிவுற்று வவுனியா நலன் புரி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(அ-151-06)

## பரீட்சைப் பயம் காரணமாக 10 மாணவர்கள் தற்கொலை!

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் ஒரே பாடசாலையைச் சேர்ந்த 10 மாணவர்கள் பரீட்சைப் பயம் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது குறித்து இந்தியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இச்சம்பவம் குறித்த விடயத்திற்கு மாணவர்கள் கல்விகற்ற பாடசாலையின் அதிபர் மறுப்புத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-06)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்களைக் களைய முடியாது என்றும் கருணாவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

எமது தரப்பில் 3 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டமைப்பில் இணைக்கப்படுவர். அவர்கள் கட்சியில் அங்கத்துவம் பெறும்வரை ஆயுதங்களை வைத்திருப்போம் என்றும் அவர் சொன்னார்.

(அ-சி)

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

விசுவமடுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் 57ஆவது படைப்பிரிவின் மீது விடுதலைப் புலிகளின் அணி ஒன்று கடந்த சனிக்கிழமை காலை 6.30 மணியளவிலும் பிற்பகல் 2.30 மணியளவிலும் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இத்தாக்குதலின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகளில் 7 பேர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் கூறியுள்ளது.

அதேவேளை, 58 ஆவது படைப் பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நேற்றுமுன்தினம் (சனியன்று) அதிகாலை 3 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை கடுஞ்சண்டை இடம்பெற்றிருக்கிறது

இந்த மோதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் போது விடுதலைப் புலிகளின் 19 சடலங்கள் மீட்கப்பட்டன என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் நேற்று தெரிவித்தது.

அதேசமயம், சாலைப் பகுதியிலும் கடுஞ் சண்டை இடம்பெற்று வருகின்றது என படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

### இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் பலி

புதுக்குடியிருப்பில் மும்முனைகளில் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தின் நான்கு டிவிசன்கள் மீது தாம் நடத்திய தாக்குதலில் சுமார் 450 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அதிக எண்ணிக்கையானோர் காயமடைந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

படையினரின் 53 ஆம், 58 ஆம் படைப் பிரிவுகள் மீதும் மூன்றாம், எட்டாம் விசேட படையணிகளின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அதன்போது படையினரின் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களையும் சடலங்களையும் புலிகள் கைப்பற்றினர் எனவும் அச்செய்திகள் தெரிவித்தன.

(அ-6)




## திருமலையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தார்.

வைத்திய உபகரணங்களையும் 50 கட்டில்கள் மெத்தைகள் என்பவற்றை வழங்கியுள்ளதுடன் எலும்பு முறிவுச் சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர் பிலாண்டோவை அனுப்பியுள்ளதாகவும் மகப்பேறு மற்றும் குழந்தை வைத்தியர்களும் விரைவில் மன்னார் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட உள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-06)

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டவர்கள் உறுப்புக்களை இழந்த தமது சிறு பிள்ளைகளை கையில் ஏந்தியவாறு பெற்றோர் கதறி அழுததாகவும், பேரணி முடிவில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு அதிகாரிகளிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டாகவும் அத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (அ-06)

## மீட்புப்பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் யோசனை போன்ற ஒன்றை, இந்தியாவும் முன்வைத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அரச வட்டாரங்கள், இந்தியா நெருங்கிய நேச நாடு என்பதால் கொழும்பு அதற்கு இணங்கியது எனவும் கூறப்படுகின்றது.

மேலும் விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி மக்களை வெளியேற்ற முடியாது. அமெரிக்கா விடுதலைப் புலிகளின் சம்மதமின்றி தரையிறங்கு கலங்களைப் பயன்படுத்தி பொதுமக்களை வெளியேற்ற முயல்கிறது. அது முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் காலத்தில் சோமாலியாவில் முன்னெடுக்கப்பட்டு, தோல்வியில் முடிந்த நடவடிக்கைக்கு ஒப்பானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## வன்னி மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்தை இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர்மேனனிற்கு அதிகாரிகள் தெளிவுபடுத்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து இதற்கான ஆதரவைக்கோரவுள்ளனர்.

### அரசுடன் ஆராயப்பட்டது

சமீபத்தில் கொழும்பிற்கு அமெரிக்க கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கொழும்பு சென்று இலங்கை அரசுடன் வாஷிங்ரனின் வன்னி மக்களை வெளியேற்றும் திட்டம் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரியொருவரை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி அங்குள்ள நிலைமைகளை மதிப்பீடு செய்துள்ளது. குறிப்பிட்ட அதிகாரி பொதுமக்களை வன்னியிலிருந்து வெளியேற்றும் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சைக் கோரியுள்ளார்.

வன்னி மக்களை மீட்கும் அமெரிக்காவின் நடவடிக்கை சாத்தியமானால் ஒபாமா நிர்வாகம் அமெரிக்காவின் வலிமையை வெளிநாடுகளில் வெளிப்படுத்தும் முதல் நடவடிக்கையாக இது அமையும்.

எனினும் இந்த நடவடிக்கை குறித்து வாஷிங்ரனில் மாறுபட்ட உணர்வுகள் தென்படுகின்றன. 2008 ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவிற்கு ஆதரவு வழங்கிய பல அமைப்புகளே இதனை ஆதரிக்கின்றன.

எனினும், ஒபாமா நிர்வாகம் இதனை அமெரிக்க கூட்டணியின் மனிதாபிமான செயலணியின் நடவடிக்கை எனக் காண்பிக்க முயல்கிறது.

### இந்தியாவுக்கு தர்மசங்கட நிலை

இதேவேளை, இலங்கை அரசு வேண்டுகோள் விடுங்பதையேற்று விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்காத சூழலில் இவ்வாறன நடவடிக்கையை மேற்கொள்வதால் உருவாகக்கூடிய அபாயகரமான சூழ்நிலை குறித்தும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அமெரிக்க இராணுவத்தின் தலைமையில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்கான இந்தியாவின் ஆதரவை வாஷிங்ரன் கோரும் பட்சத்தில் புதுடில்லிக்கு இது தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தலாம்.

இதேவேளை, வன்னியில் மோசமான நிலையை அடைந்துள்ள மனிதாபிமான நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வைக் காண்பது என்பது குறித்து இந்திய அரசுக்குள்ளேயே மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இராணுவ நடவடிக்கை பாணியிலான செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்க்கிறார்.

விடுதலைப் புலிகளின் வெளிப்படையான ஆதரவு இல்லாமல் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதால் ஏற்படக்கூடிய விளைவுகள், மேலும் இதனால் பொதுத் தேர்தலில் ஏற்படும் தாக்கம் குறித்து அவர் கவலையடைந்துள்ளார்.

இந்தியாவின் ஒத்துழைப்பு இல்லாமல் அமெரிக்கா தமிழ்மக்களை மீட்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமானால் பிராந்திய வல்லரசு என்ற இந்தியாவின் அந்தஸ்திற்கு பாதிப்பு ஏற்படலாம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கருதுகிறார் என ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-சி)

## ஈழத்தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்தமிழ் கழகம் சார்பில் அன்பன் தமிழ் அடியான், காமராஜர் பேரவை சார்பில் மாவன்னி குழந்தைவேல், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் மாநிலச் செயலாளர் வி. மூர்த்தி, அகில இந்திய மனித உரிமைக் கழகத்தின் கர்நாடக மாநில தலைவர் எஸ்.கே.வரதராஜன், திராவிடர் கழக இராவணன், கர்நாடக தமிழ் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த அந்தோனி, சினிமா இயக்குநர் கு.கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-சி)

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரமளவில் பேச்சுக்களை நடத்துவார் என்றும் அப்போது தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கோருவது குறித்து முடிவு எடுக்கப்படும் எனவும் அறியப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ்ப்பாணத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதன் பின் 1998 இல் மாநகரசபை தேர்தல் நடைபெற்றது. 11 வருட கால இடை வெளிக்குப் பின் மாநகரசபைக்கு தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட பகுதியில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அரசின் முதற்கட்ட நடவடிக்கையாக இது அமையலாம் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (அ-சி-6)

## திருமலையிலிருந்து நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டம் புதுமாத்தளன் பகுதிக்கு இந்தக் கப்பல் நேற்று புறப்பட்டுச் சென்றதை கொழும்பில் உள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் பேச்சாளர் சொபி ரொமனன்ஸ் உறுதிப்படுத்தினார்.

திருகோணமலையில் இருந்து 500 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களுடன் சென்ற இந்த அரசின் கப்பலுக்கு செஞ்சிலுவை சர்வதேசக்குழு வழித்துணை வழங்கியுள்ளது என்றும், இந்தக் கப்பல் கரையை நெருங்கிச் செல்ல முடியாத காரணத்தினால், கப்பலில் இருந்து சிறிய படகுகளுக்குப் பொருள்கள் இறக்கப்பட்டு பின்னர் அவற்றை கரைக்குக் கொண்டு சென்று சேர்க்க வேண்டி ஏற்பட்டது எனவும் சொபி ரொமனன்ஸ் கூறினார்.

இந்தக் கப்பலில் கொண்டு செல்லப்பட்டுள்ள 500 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களையும் இறக்கி முடிப்பதற்குப் பல நாள்கள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் சொபி ரொமனன்ஸ் தெரிவித்தார்.

(அ-சி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.